123

CORONATION KINDERGARTEN SONGS.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED. 20 FEB 1914 * MADRAS.

Tamil

கார்னேஷன்கிண்டர்கார்ட்டன் பாட்டுகள்.

(*For the use of Elementary schools*)

BY

P. THYAGARAJA AIYER.

Ag. Second Assistant Government Training School

CUDDALORE.

Permission has been granted by the Director of Public Instruction, in his Pro. No. 1942 of 1913/3-4-1913, to have his name inserted on the title page.

FIRST EDITION 1000 COPIES.

PUBLISHED BY

V. Krishnamoorthy Aiyer.

PRINTED AT THE SRI KRISHNAVILASAM PRESS

TIRUPAPULIYUR.

Copyright registered.

Price As. 8. Postage extra.

1913.

Coronation Kindergarten Songs,

(Tamil).

கார்னேஷன் கிண்டர்கார்ட்டன்

பாட்டுகள்.

OFFICE OF THE REGISTRAR OF B...
REGISTERED
20 FEB 1914
MADRAS

(எலிமெண்டரி பாடசாலைகளின் உபயோகத்திற்காக)

கனம் டைரக்டர் துரை அவர்களால் இந்த புஸ்தகத்தின்
தலைப்பில் தன்பெயரைப்போட்டுக்கொள்ளும்படி உத்திரவு
பெற்று கடலூர் கவர்மெண்டு டிரெயினிங் பாடசாலை
யின் இரண்டாவது உதவி உபாத்தியாயரான

பி. தியாகராஜஅய்யரவர்களால்,

இயற்றப்பட்டது

வெ. கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்களால்,
பிரசுரம்செய்யப்பட்டு,
திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீ-கிருஷ்ணவிலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1913

முதல் பதிப்பு காப்பி 1000.

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

Copyright Registered.

பொருள் அடக்கம்.

விஷயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2[illegible] FEB. 1914
MADRAS.

1.	தெய்வவாழ்த்துகள்.	பக்கம்	8
2.	இராஜவாழ்த்து.	,,	14
3.	டீரில் பாட்டுகள்.	,,	15
4.	இன்ஸ்பெக்டரைவரவேற்கும்பாட்டுகள்.	,,	17
5.	நரியும் திராக்ஷைப்பழமும்.	,,	19
6.	காக்கையும் குடமும்.	,,	21
7.	ஓனாயும் கொக்கும்.	,,	24
8.	புறாவும் எறும்பும்.	,,	27
9.	ஓனாயும் ஆட்டுக்குட்டியும்.	,,	30
10.	காக்கையும் நரியும்.	,,	31
11.	குடியானவனும் பொன்வாத்தும்.	,,	36
12	தேக்குமாமும் நாணலும்.	,,	39
13.	சிங்கமும் நான்கு எருதுகளும்.	,,	42
14.	பேராசையுள்ள நாய்.	,,	45
15.	பட்டிக்காட்டானும் பாம்பும்.	,,	48
16.	பிரயாணியும் கரடியும்.	,,	51
17.	இடைப்பையனும்-புலியும்.	,,	55
18,	சிங்கமும் சுண்டெலியும்.	,,	58
19.	எலியும் எலிக்குஞ்சுகளும்.	,,	61
20.	நரியும் ஆடும்.	,,	65
21.	குரங்கும் கிளியும்.	,,	68
22.	பூனைகளும் குரங்கும்.	,,	72
23.	வேடன், புறா, ராஜாளி.	,,	76
24.	வேடனும். புலியும், கரடியும்.	,,	80
25.	செய்கையுடன்பாட்டு, கோலாட்டம், கும்மி.	,,	84
26.	கிழவனும், அவன் மகனும், கழுதையும் (நாடகம்).	,,	92
27,	முனியனும் அவன் தாயாரும் (நாடகம்)	,,	100

2077
894.8M3

OPINIONS.

1. P. Thyagaraja Aiyer of the Cuddalore Govt. Training School has shown me a small production of his consisting of stories with songs and dramas, suited for Kindergarten occupations of students of elementary schools. They are really good and calculated to be of much real use to the youngsters for whom they are intended. I wish every success to this little pamphlet by its enterprising author.

Cuddalore 17—12—12. } (Sd) B. C. RAMASAMY AIYER, *Asst. Inspector of Schools.*

2. Coronation Kindergarten songs and stories prepared by Mr. P. Thyagaraja Aiyer Assistant Master Government Training School Cuddalore, are well suited for the pupils of the elementary Schools. It is strongly recommended that the portions of songs and stories should be limited and graduated from Infant to II class. The earnest desire taken by the author in suiting the minds of young children of 6 to 10 years old and the warm interest devoted in compiling songs in simple style with appropriated ragams are quite commendable and praise worthy. I am of opinion that this little book will never fail to secure the hearty co-operation of his fellow teachers. I strongly recommend that this may be widely circulated among the elementary school Masters.

Cuddalore Range 25—12—12. } (Sd) V. NARAYANASAMY AIYER, *Ag. Sub-Asst Inspector of Schools.*

3. I read to-day with great pleasure the interesting pamphlet " The coronation Kindergarten songs " by Mr. P. Thyagaraja Aiyer, Ag. 2nd Asst. Govt Training school cuddalore. The book contains a variety of story songs, calculated to instil good moral principles in the minds of the pupils Songs on Kummy and Kolattam, action songs as well as the two dramatic interludes at the end make the book still more interesting and useful.

The publication of a book like this for the use of the elementary school teachers has been a long felt want and it is earnestly hoped that the public will extend their heartiest encouragement and co-operation to the author in his noble endeavours to supply such a want of wish the little book every success.

Cuddalore.
18—12—12.

(Sd) N. VENKATTARAMAIER,
Ag Supervisor of Elementary Schools,
Cuddalore.

---

4. P. Thyagaraja Aiyer, Ag. Second assistant, Govt. Training School Cuddalore, has prepared a pamphlet consisting of stories and dramas combined with songs of appropriate ragams.

They are instructive and are well suited to the Lower elementary schools.

(Sd) N. SESHAGIRI ACHAR,

Cuddalore.
18—12—12.

Ag Head-Master,
Govt. Trg. School.

5 I have found with great pleasure the Kindergarten songs by Mr P Thyagaraja Aiyar, 2nd asst. Govt Training School, Cuddalore. I have known him as an intelligent teacher who always thinks about his work, and as I naturally expected the songs has been correlated and suggestive. If published, I am confident that they would really be useful.

(Sd) K. S. NATESA AIYER,
Ag. 2nd asst.
Govt Madrsa-i-Azam

25th August 1913

முகவுரை.

இந்த "கார்னேஷன் கிண்டர் கார்ட்டன் ஸாங்ஸ்" என்
னும் புஸ்தகத்தை தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள, அநேக உபா
த்தியாயர்களும் அநேக உபாத்தியாயினிகளும், இன்னும் மற்று
முள்ள உபாத்தியாயத்தொழிலுக்குப்பயிலுகின்ற வித்தியார்த்தி
களும், இந்தப் புஸ்தகத்தை வெளியிடவேண்டுமென்று கேட்டு
க்கொண்டதின் பேரில் இப்புஸ்தகம் வெளியிடப்பட்டது,
இதில் தெய்வ வாழ்த்துகளும், கதைகளும், கதைகளுக்குத்தகு
ந்த பாட்டுகளும், இக்கதைகளை பாடங்களுக்கு அனுகூலமாக
சில பாகங்களை சம்மந்தப்படுத்தியும், மாதிரியாக ஒரு கதையை
மட்டும் எல்லாப்பாடங்களோடு சம்மந்தப்படுத்தியுமிருக்கிறது.
தவிரவும் மார்ச்சிங்பாட்டுகளும், அபிநயப்பாட்டுகளும், நாடக
ங்களும், இன்னும் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களுக்குவேண்
டிய கும்மிகளும், கோலாட்டங்களும், இதில் அடங்கியிருக்கின்
றன. எனது முக்கியமான நோக்கம் இஃதல்லாமல் ஒன்று
ண்டு; அதாவது நமது மாக்ஷிமை தங்கிய கிருபாநிதியாகிய ஐந்
தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியும், அன்புமிகுந்த சக்கரவர்த்தினி
யாகிய மேரியம்மாளும், இந்து தேசத்தில் அஸ்தினாபுரமென்று
வழங்கும்படியான டெல்லியில் மகுடாபிஷேகம் செய்துகொண்
டதின் நிமித்தம் நான் அவர்களிடத்தில் வைக்கப்பட்ட அதிக
ப்பிரீதியை முன்னிட்டு இந்தப்புஸ்தகத்திற்கு "கார்னேஷன்
கிண்டர்கார்ட்டன் ஸாங்ஸ்" என்னும் பெயர் கொடுத்து என்
அன்பைவெளிப்படுத்தினது தான். இது தான் எனது முக்கி
யமானகாரணம். இந்தப்புஸ்தகத்தைக்கடலூர் ரேஞ்சு அஸி
ஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களும், ஸப் அஸிஸ்டெண்டு
இன்ஸ்பெக்டரவர்களும், ஸூபர்வைஸரவர்களும், கடலூர் கவ
ர்ன்மெண்டு டிரெயினிங்ஸ்கூல் ஹெட்மாஸ்டரவர்களும், இன்
னுமற்றுமுள்ளவர்களும் பார்வையிட்டு நல்ல ஸர்டிபிகேட்டுகள்
முழுமனதுடன் கொடுத்திருக்கிறார்கள். இந்த புஸ்தகமா

னது புதுமாதிரியை அனுசரித்தே எலிமெண்டெட்ரி பாடசாலை களுக்கேற்க இனிய தமிழ் நடையில் பிள்ளைகளெல்லோரும் பார்த்து வாசிக்கும்படியாயும், பாடும்படியாயும், பற்பல ராகங்களில் பற்பல மெட்டுகளுடனே அமைக்கப்பட்டிருக்கிறது. கதைகளை பாலர்வகுப்புமுதல் நான்காவதுவகுப்புவரையில் படிப்படியாக, நான்குகதைகள் வீதம் ஏற்படுத்தியிருக்கிறது.

சிலபாடசாலைகளில் மூன்ருவது, நான்காவது, வகுப்புகளுக்குச் சொல்லிக்கொடுக்காதபக்ஷத்தில் கீழ்மூன்றுவகுப்புகளிலும்பாட்டுகளைச்சரியாகப்பங்கிட்டுக்கொள்ளவும் உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு; அதாவது முதல் வருஷத்தில் பாலர் வகுப்பில் 4 பாட்டுகள்தெரிந்துகொள்ளுகிறவன் அடுத்த வருஷத்தில் முதல்கிளாஸில் 4+4=8 பாட்டுகள் தெரிந்துகொள்ளும்படியும், அதே மாதிரி 4-வதுவகுப்பில் 20 பாட்டுகளை நன்ருய்த்தெரிந்து கொள்ளும்படியாகச்செய்யவேண்டும்.

*இப்புத்தகத்தில் ஏதேனும் குற்றங்குறைகளிருப்பின் அவைகளை என்மேலிருக்கும் பிரியத்தினுல் சீர்திருத்தி மனங்களிகூர்ந்து என்னையும் கனப்படுத்தும்படியாக மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அக்டோபர் 1913
கடலூர்.

பி-தியாகராஜய்யர்.

விநாயகர் துதி. 1.

இராகம்—மத்தியமாவதி—தாளம்—ஆதி.

பல்லவி.

1. கணநாதனே பணிந்தேன்—உந்தனையான்
கணநாதனே பணிந்தேன்.

அனுபல்லவி.

2 பணிமுடியை தரிக்கும்—பரபிரம்மத்தின் செல்வனே (கண)

சரணம்.

3. அனைவரும் பூஜிக்கும்—ஆகு வாகனனே,
கனத்த ஸொகுஸுடனே கைலையில் வசிப்போனே; (கண)

4. தியாக ராஜலோலனே—தேவர்க்கனுகூலனே,
பாகவதர்களாலே பிரேமையாய் தியானிப்போனே. (கண)

சுப்பிரமணியர்-துதி 2

இராகம்—முகாரி—தாளம்—ஆதி.

பல்லவி.

1. எந்தனை காக்கலாகாதா-ஏகத்தனுதா; (எந்த)

அநுபல்லவி,

2. சந்ததமும் நின்னிடம் பந்தமாக வந்து அந்தர
[ங்கத்துடன் வந்து திரிந்தலையும். (எந்த)

சரணம்.

3. மந்த புத்தியை. நானிழந்து அடைக்கலமென்று,
உந்தனை மனதினுளுகந்து-ஸம்ஸாரமெல்லாம்,
நிந்தனையாக நான் ஒழிந்து-உன்னைத்தவிர,
சொந்தம் வேறில்லை யென்றுதெரிந்து-கொண்ட
[தினாலே,
அந்தமாய் நின்னை நான் அநுதினம் நினைத்தேன்,
வந்தனங்களனேகம்-விந்தையாய்ச்செய்தேன்,
உந்தனைச்சரணமென்-றநு தினமடைந்தேன்,
எந்தனைக்காப்பது கந்தா உன் கடமை, (எந்த)

4. ஆசாபாசமறத்தொழித்தேன்—அதனுடனே.
தோஷமனைத்தையும்தொலைத்தேன்-சுந்திரத்தியா,

கேசனருளைப் பெற்றெடுத்தேன்-கூற்றனுடைய,
பாசக்கயிற்றினின்றும் விடுத்தேன்-கலியுகத்தில்,
மோசக்காரர்கள் செய்யும் நாசத்தைத் தெரிந் [தேன்;
வேசிகள் செய்யுஞ்சாலம் வேஷம்போல் நினைந் [தேன்,
காசுபணத்தையெல்லாம் தூசிபோல் உணர்ந் [தேன்,
ஈசா நின்னையே நான்நேசமாயடைந்தேன்.(எந்த)

பரமசிவன் துதி. 3.

இராகம்—நாதநாமக்ரியை—தாளம்-ஆதி
மெட்டு—நினைப்பதெப்போது.

பல்லவி.

1. சச்சிதாநந்த சிவமே நச்சினேன் தினமே;

அனுபல்லவி.

2. கொர்ச்சிக்கும் எமதர்ம ராஜனை வதைத்து நீர்,
அர்ச்சிக்கும் மார்க்கண்டன் இச்சையைத்தீர்
[த்த; (சச்சி)

சரணம்.

3. விருந்திடும் சிறுத்தொண்டன் அகந்தனில் பா
[லனை,
அருந்திடும் சமயத்தில் இருந்தெட்ந்தெரியா;
(சச்சி)
4 நேசன் சுந்தரம் தியாகராஜனை அழைக்கவே,
ஈசன் ஸோமயாசிக்கு நீசனாய் வந்த. (சச்சி)

சரஸ்வதிதுதி. 4

இராகம்—ஆநந்தபைரவி—தாளம்—ஆதி.

பல்லவி.

1 வாணீ சரணமடைந்தேன்—திவ்யவீணு
பாணீ சரணமடைந்தேன்.

அனுபல்லவி.

2. ஆணிமுத்துகள் பூண்ட--வேணி அன்புண்டபகல்,
யாண்மி வேத புஸ்தக—பாணி அருள்புரிவாய்.

சரணம். (வாணீ)

3. சந்ததம் நின்னை நினைந்தேன்-சதுர்முகபிரும்மா
தேவியே உன்னைப்பணிந்தேன்;
மந்த புத்தியுடனே எங்குந்திரியுமெந்தன்,
அந்தகாரத்தைப்போக்கி சொந்த முடன் ரக்ஷிப்
பாய். (வாணீ)

பொதுவான கடவுள் துதி. 5.

இராகம்—எதுகுலகாம்போதி—-தாளம்—ஆதி

மெட்டு-கல்லார்க்கும்.

ஆதியிலனாதியாக ஆவிர்பித்த பிர்ம்மம்,
அண்டாண்ட லோகமெங்கும் ஆனந்திக்கும்பிர்ம்மம்,
பாதிமெய்யைப் பார்வதிக்கு பகர்ந்தளித்த பிர்ம்மம்,
பங்கப்பட கங்கைதனை பார்த்து விட்ட பிர்ம்மம்,
ஜோதியாக விளங்கு மெங்கும்-சுத்ததத்துவ பிர்ம்மம்,
தும்புரு நாரதாதிகள் ஸ்தோத்தரிக்கும் பிர்ம்மம்,
மேதினியில் தியாகேசனாய் விளங்கும்பர பிர்ம்மம்,
வேதங்களுக் காதாரமாய் வீற்றிருக்கும் பிர்ம்மம்.(ஆதி)

பொது வணக்கம். 6.

இராகம்—கரஹரப்பிரியா, தாளம்—ஆதி
மெட்டு—ஸங்கல்பமே.

பல்லவி.

1. எந்தனையே கடைக்கண்ணால் பார்ப்பாய்,
என்மேல் தயை வைத்து ரக்ஷிப்பாய். (எந்த)

அநுபல்லவி.

2. உந்தனையே ஒருநாளு மறவேன்,
ஒருக்காலும் கைவிடுதல் கூடாது; (எந்த)

சரணம்.

3. சந்ததம் நின்னை நான்—சரணமடைந்தேன்,
ஸர்வலோக சரண்ய—ஸர்வேஸ்வரா
பந்தந்தனை-களைந்து போக்குவாய்,
பரபிர்ம்மமே தியா—கராஜா. (எந்த)

இராமன் துதி. 7.

இராகம் இந்துஸ்தானி-தாளம் ஏகம்-மெட்டு ஹேயேசய்யா;

1. ஹரேராமா, உன்னையல்லாது போமா; ஐயனேபர [ந்தாமா;
பராமுகமாயிருத்தலாமா, ஹரி பக்தரை காக் [கொணாது போமா,
ஐயனே இது தர்ம்மமா, ஆப்தர்கள் பரந்துவாமா,
ஹரே ராம, ஸ்ரீராமா, ஜயராமா ஹேராமா; (ஹரே)

2 எந்தனைக்கைவிடுதல், உந்தனுக்கு நியாயமா,
முன்செய்ததீவினை அறியேன்,
உன்னையே நம்பினேன், உன்னையே நம்பினேன்,
எந்தனைக்காப்பது உந்தன்கடமையே. (ஹரே)

ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி.

இராஜ வாழ்த்து. 8.

இராகம்—காபி—தாளம்—சாபு—மெட்டு—சீரார்சபைத்.

பல்லவி.

1 மங்களம் எங்கள் மகா—ராஜர்க்கும் ராணியர்க்
[கும்;

அனுபல்லவி

2. மங்களம் ஐந்தாவது ஜார்ஜுக்கும், மேரியார்க்
[கும்; (மங்)

சரணம்.

3. செங்கோல் தனைக் கொண்டு-சிரஞ்சீவியாய்-
[வாழ,
என்றுமிருக்கின்ற நம் இறைவனை வேண்டிடுவோம்.

4. அஸ்திநாபுரமென்ற-ஐந்துபேர் ஆண்ட ஊரில்;
சஸ்திரத்துடன் ஐந்தாம் ஜார்ஜுமே முடிகொண்
[டார்; (மங்)

அவையடக்கம் 9.

வெண்பா.

சேற்று நீரினிலே செங்கழுநீர் பூத்தாப்போல்,
ஏற்றத்தாழ்வுடனே யான் செய்த—தேற்றமிலா,
கல்லாதான் செய்தவையிற், கணக்கிலா பிழையிருப்
எல்லோரும் பிரியமுடனே ஏற்க். [பின்.

வகுப்புக்குச்செல்லும் மார்ச்சிங். 10.

இராகம்—காபி—தாளம்—ஏகம்.

1 செல்வோம் செல்வோம் வாருங்கள்,
சேர்ந்து நன்றாய் வாசிக்க;
2 போவோம் போவோம் வாருங்கள்,
புகழ்ந்து பாடங்களைப் படிக்க;
3 கால்களை ஒழுங்காய் வைத்துக்கொண்டும்,
கைகளைத் தொடையோடு சேர்த்துக்கொண்டும்;
4 வணக்கமாய் பாட்டுகள் பாடிக்கொண்டும்,
வந்தனம் செய்து நாம் வகுப்பில் செல்வோம்;

மார்ச்சிங் டிரில்-11.

இராகம்—பியாக்-தாளம்-ஏகம்--மெட்டு--ஐயாகரணைமுதல் இரண்டடி

1. நாமும் நன்றாய் வாசித்தபின், நாகரீகமாகவே,
நாமும் ஏக வரிசையுடன், நன்றாய்ப்போவோம் வாருங்கள்;
2 கோணல்தனை நீமித்திக்கொண்டு, கோடிவரையி [ல் செல்வோமே,
வேண்டுமென்ற பாட்டைச்சொல்லி, மேன்மை [யாக நடப்போமே;
3. இடதுகாலே முன்னால் வைத்து, இரட்டையாகப் [பிரிவோமே,
தடதடவென்று நடந்துகொண்டு, தைரியமுட ன் போவோமே;
4. எப்போதும் நாம் இடதுகாலே, இன்பமுடன் [வைப்போமே,
தப்பாமலே நாமும் செய்தால், தகுந்தபிள்ளை [ஆவோமே;
5, வட்டமாகச்சென்றால் நாமும், வையம்போலேத் தோணுமே;

சட்டமுடன் அதனைச்செய்தால், ஸகலருக்கும்
இன்பமே;

6. எம்மைப்போன்ற எழுத்தைச்செய்ய, எதிருக்
கெதிராய்ப்பாய்வோமே,
தம்மைத்தாமே பார்த்துக்கொண்டு, தந்திரமாய்ச்
செல்வோமே,

7. பாம்புபோல வளைந்துநாமும், பண்புடனே போ
[வோமே,
தாம்புபோலே பிணைத்தலாக, தப்பாமல் நாம்
செல்வோமே;

இன்ஸ்பெக்டர் அல்லது இன்ஸ்பெக்ட்ரஸ்
ஸை வரவேற்கும் பாட்டுகள் -12.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி-மெட்டு வந்தனம்தந்தேன்.

1. வந்தனம்செய்தோம் நாங்கள் வணக்கமுடனே,
விந்தையாகவந்தனங்கள் விதவிதமாய்ச்செய்தோமே,
இன்பமாய் அன்புடன்,
ரக்ஷிக்கும் புரீக்ஷிக்கும் எங்கள் இன்ஸ்பெக்டருக்கும் (இன்
ஸ்பெக்ட்ரஸ்ஸுக்கும்) (வந்)

2. மங்களமாக நாங்கள் மகிமையுடனே,
தங்கம் போன்ற இன்ஸ்பெக்டரும் (இன்ஸ்பெக்ட்ரஸ்
ஸும்)

செல்வம் ஓங்கி வாழ்கவே,
எங்கெங்கும், நிறைந்துள,
இறைவனை எல்லோரும்-இஷ்டமுடன் பக்திசெய்து (வந்)

இராகம்—மோகனம்—தாளம்—ஆதி—மெட்டு—ஸ்ரீராமச்
சந்திரனே; 13

1. எல்லோரும் வந்தனங்கள் இன்ஸ்பெக்டர் அவர்களை
இன்பமுடனே செய்வோம்-நாம்-நாம்-நாம்;
ஆடியே மிகப்பாடியே. (எல்)
2. பள்ளிப்பிள்ளைகளெல்லாம்—துள்ளி விளையாடியே,
பற்பலவிதம் செய்தல் நேர்—நேர்—நேர்;
நாடுவோம் அந்தத்தேடுவோம் (எல்)
3. சிறுவரெல்லோருங்கூடி-சிறந்த பாட்டுகள் பாடி,
செல்வமாய் இருப்பதே சீர் சீர் . சீர்;
சொல்லுவோம்-கூடி-விள்ளுவோம்; (எல்)

Part I.

முதல் பாகம்.

பாலர் வகுப்பு.

நரியும் திராக்ஷைப்பழமும்-1.

கதை.

ஒரு காட்டில் ஓர் நரி இருந்தது. அதற்கு ரொம்பவும் பசியாயிருந்தது: காடு முழுவதும் சுற்றிப்பார்த்தது

அதற்கு ஆகாரம் ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் சமீபத்திலுள்ள கிராமத்திற்குப்போனால் ஏதாவது கிடைக்கலாமென்று நினைத்தது. அவ்விதமாக வரும்போது வழியில் ஒரு. திராக்ஷைத்தோட்டத்தைக்கண்டது. உடனே அதிக சந்தோஷத்துடன் தோட்டத்திற்குள் போயிற்று, அங்கே கொத்துக் கொத்தாய்த்தொங்குகிற பழங்களைக்கண்டு, எட்டிப்பிடிக்கத்தாவித்தாவிப்பார்த்தது அது எட்டவில்லை. மறுபடியும் தன்னால் கூடியவரையிலும் எட்டிப்பார்த்தது. அப்பொழுதும் எட்டவில்லை; சீ, சீ, இந்தப்பழம் புளிக்கும் எனக்குவேண்டுமானால் வெகுலகுவாய் பறித்துவிட மாட்டேனா? என்று சொல்லிக்கொண்டு. வந்தவழியேபோய் ஆகாரமில்லாமல் அலைந்து திரிந்தது. ஆகையால் ஒருவருக்கு ஒன்று கிடைக்காவிட்டால் அதைப்பற்றி தூஷணையாக ஒன்றும் சொல்லக்கூடாது.

பாட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஏகம்-மெட்டு-நொண்டிச்சிந்து.

1. மெத்தப்பசியுள்ள நரியொன்று-காடுதனில்,
ஏத்தனை உபாயம் செய்தும் பயன்படாமல்,
2. சுற்றிதிராக்ஷை தோட்டமொன்றில்-அழகாக,
பத்தி பத்தியாய்ப்பழங்கள் பழுத்திருக்க,
3. கண்டு வெகுகளிப்புடனே-எட்டிப்பறிக்க,
மண்டியிட்டு குட்டிக்கரணங்கள் போட்டும்,
4. எட்டவில்லை என்று கண்டு-அதனிடத்தில்,
மட்டில்லா வார்த்தைகள்பேசி மதியில்லாமல்,
5. இந்தப்பழம் புளிக்குமென்றே-சீ [illegible]
அந்தமுடன் [illegible]
6. [illegible]

பிணக்குகள் சொல்லிக்கொண்டு ஏசித்திரிவார்.

7. தந்தநத்தம் தனதானு-தானு,
தக்நான நானநன்னி தனதானு.

ட்ராயிங்வேலைகள்

நரியின்:-தலை, கால், வால்; திராக்ஷையிலை, கொடி, பழம் [கொத்து

கிண்டர் கார்ட்டன் வேலைகள்.

களிமண்ணால்:-நரியின், தலை,கால், திராக்ஷ இலை,பழம், [கொத்து;

காக்கையும் குடமும்.

கதை.

ஓர் ஊரில் ஒரு காக்கை இருந்தது. அதற்கு அதிக

தாகமாக இருந்தது. ஊர் முழுவதும் சுற்றிப்பார்த்தும ஓரிடத்திலும் அதற்குத்தண்ணீர் அகப்படவில்லை. இப்படி அங்கு மிங்கும் அலைந்துகொண்டிருக்கும்பொழுது கடைசியாக ஒரு வீட்டின் தோட்டத்தில் ஒரு ஜாடியில், தண்ணீர் இருக்கக்கண்டது. அதிக ஆவலுடனும், சந்தோஷத்துடனும் தண்ணீரைக்குடிக்கப்போயிற்று. தண்ணீர் ஜாடியின் அடியில் இருந்தபடியாலும், ஜாடியின் வாய்குறுகிஇருந்தபடியாலும் காக்கைக்கு கழுத்தும்நுழையவில்லை தண்ணீரும் எட்டவில்லை. பிறகு அது எவ்விதம் செய்தால் தண்ணீரைக்குடிக்கலாம் என்று யோஜித்தது. கடைசியில் ஒரு முடிவுசெய்துகொண்டு கருங்கற்களை ஒவ்வொன்றாக அந்த ஜாடிக்குள் கொண்டுவந்துபோட்டது. அப்போது தண்ணீர் மேலேவர, அது சந்தோஷத்துடன் தண்ணீரைக்குடித்து தாகத்தைத்தீர்த்துக்கொண்டு தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தது. ஆகையால் நாம் ஒரு காரியத்தை அதிக ஊக்கத்துடன் இடைவிடாமற் செய்தால் அது நமக்குக்கைகூடும் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்".

பாட்டு

இராகம்- ஹம்ஸத்வனி-தாளம்-ஆதி-மெட்டு-சுற்றுவிலகிவிரும்பிள்ளாய்

1. அதிகதாகமுள்ள காக்கை-அங்கு மிங்கும் ஓடிற்று,
கதியில்லாமல் வீதிமுழுதும்-கருத்தாய்ச்சுற்றிப்பார்த்தது;

2 அங்கிருந்த தோட்டமொன்றில்-அழகாய்க்கண்டதும் ஜாடியை,

தங்காமலே வந்து பார்த்து-தனக்குள் மகிழ்ச்சி அடை
[ந்தது;

3. கடுகிவந்து குடிக்கவுண்ணி-கண்ட ஜாடியிற் பார்க்கவே
அடியில் ஜலம் இருக்கக்கண்டு அலமலந்து போயி
[ற்று.

4, சக்தியினால் ஜலத்தைக்குடிக்க ஜல்தியில் கருங்கற்களை
யுக்தியினால் எடுத்துப்போட்டு உபாயத்தினால் குடித்
[தது.

7. முயற்சியுடையோரிகழ்ச்சி அடையார் முதன்மையா
[னகொள்கையாம்,

பயிற்சிசெய்துபார்க்கப்பார்க்க-பலனைத்தந்திடும் பக்வமாம்.

ட்ராயிங்,

காக்கையின்:-தலை, கால், அங்கமுழுவதும்; ஜாடி; கருங்
[கற்கள்.

கிண்டர் கார்ட்டன்

களிமண்வேலை:-

காக்கையின்:-தலை, கால், அங்கமுழுவதும், ஜாடி.

ஓனாயும் கொக்கும்-3

கதை.

ஒருகாட்டில் ஒருஓனாய் இருந்தது. அதுபசியினால் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது. அந்த ஸமயத்தில்ஒரு ஆட்டைக்கண்டது.அதை அதிக ஆத்திரத்துடன் தின்றபொழுது தொண்டையில் ஒரு எலும்பு மாட்டிக்கொண்டது, அதை எடுத்துவிடத்தன்னால் கூடியமட்டும் பார்த்தும் முடியவில்லை. கடைசியில் அது ஒரு கொக்கினிடம்போய் தன் தொண்டையிலிருக்கப்பட்ட எலும்பை எடுத்துவிடும்படிவேண்டிக்கொண்டது. அதற்குக் கொக்கு தனக்கு எதாவது இனாம் கொடுத்தால் அவ்வி

தம் செய்வதாக ஒப்புக்கொண்டது. ஓனயும் அப்படி தருவதாக ஒப்புக்கொண்டது. உடனே கொக்கு தன் நீண்டகழுத்தை அதன் வாயிற்குள்விட்டு எலும்பை எடுத்தெறிந்துவிட்டது. அதன்பிறகு அது ஓனயை வெகுமதிகேட்டது. அதற்குஓனய் "என்வாயில் உன் கழுத்திருக்கும்போதே நான் கடித்திருந்தால் நீ இந்நேரம் இறந்திருப்பாயல்லவா? நான் அவ்விதம் செய்யாமலிருந்ததே உனக்கு நல்ல வெகுமதி என்று நினைத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு தன்வழியே போய்விட்டது. அப்போது கொக்கு ஏமாந்துபோயிற்று. அதனால் நாம் துஷ்டர்கள் வார்த்தையை நம்பக்கூடாது.

பாட்டு.

இராகம்—இந்துஸ்தானிபியாக்—தாளம் - ரூபகம்
மெட்டு தில்மஹோ தில்மசய்யா.

1. காட்டினில் ஓர் ஓனயும் கண்டுகொண்டது ஆடுஒன்ற
   தாஷ்டீகமாய் ஆட்டைக்கொன்று-தாபமுடன் [தின்கையிலே

2. மந்தமுள்ள ஓனய்க்கப்போ-மாட்டிக்கொண்டது எ [லும்பு ஒன்று
   சொந்தமாகக்கொக்கினிடம் சோர்வடைந்து சொன் [னது

3. எந்தனுடை அன்பனே நீ எந்தன் தொண்டை எலு [பைமெல்ல
   அந்தரங்கமாய் எடுத்தால் அளிப்பேன்வெகுமதிநல்

4, ஏழ்மையான கொக்குமந்த எலும்பையெல்ல எடுத்
[தெறிந்து,
தாழ்வாய் ஓனாயைப்பார்த்து தருவாப்இனாம்என்று
[கேட்க;
5. பித்துப்பிடித்தகொக்கே பிதற்றுகிறாய்எந்தன்முன்
[னே,
கத்திக்கத்திகேட்பாயானால் கதறடிப்பேன் கடுங்கோப
[த்தால்;
6. எந்தன்வாயில் உந்தன்கழுத்திருக்கும்போதே கடித்
[திருந்தால்,
மந்தபுத்திபுள்ளகொக்கேமாண்டுநீயும்போயிருப்பாய்;
7. என்றதும் கொக்குமப்போ ஏக்கத்துடன் ஏமாந்தது;
நன்றிகெட்டவர்களோடுநாமும் ஸ்நேகம்செய்யொண்
[ணாது.

ட்ராயிங்.

ஓனாயின்:—தலை, கால், வால்; ஆட்டுகுட்டியின் தலை, கால்,
கொக்கின்:-தலை, கால், அங்கமுழுவதும்; எலும்பின் உருவம்

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்—ஆட்டுக்குட்டியின் தலை, கால்; கொக்கின்,
[தலை, கால், முழுவதும்.

புறாவும் எறும்பும். 4.

கதை.

ஒரு காட்டில் ஓர் எறும்பு இருந்தது. அதற்கு அதிக தாகமாக இருந்தது. அது அவ்விடத்திலிருந்த ஒரு ஆற்றில் தண்ணீர் குடிக்கப்போயிற்று. எறும்பு ஜலத்தின்கிட்டப்போனவுடன் அலை அடித்து அந்த ஆற்றில் தள்ளிவிட்டது. எறும்பு தத்தளித்துக்கொண்டிருப்பதை ஒரு புறா பார்த்தது. அது தான் உட்கார்ந்திருந்தமரத்திலிருந்து ஒரு இலையைப்பறித்து எறும்பின்கிட்டப்போட்டது. எறும்பு அதன்மேல் ஏறிக்கொண்டது. காற்று அந்த இலையை கரையில்கொண்டுவந்து சேர்த்ததும், எறும்பு கரைசேர்ந்து பிழைத்துக்கொண்டது. பிறகு அவ்வழியே வந்த வேடனொருவன் அந்தப்புறாவைப்பார்த்து அடித்துக்கொல்ல நினைத்தான். அவன் அம்பினால் குறி பார்த்துக்கொண்டிருக்கையில் முன்புறாவினால் பிழைத்த

எறும்பு அவன் காலில் நன்றாய்க்கடித்துவிட்டது. அவன் ஐயோ என்று கதறி அப்பால் விழவும், புறாசத்தம்கேட்டு ஓடிப் பிழைத்துக்கொண்டது. ஆகையால் நாம் ஒருவரு க்கு உபகாரஞ்செய்தால் நமக்கொருவர் உபகாரம் செய் வார்.

பாட்டு.

இராகம்-காபி, தாளம்- ஆதி-மெட்டு, ராஜா வருவாரென்ற [தங்கப்பாட்டு;

1. காட்டினில் ஓர்எறும்பு கனத்த தாகத்தினாலே,
தாட்டீகமாய் ஜலத்தில் இறங்க தொப்பென்று விழுந் [தது;

2. மரத்தினில் உட்கார்ந்த மாடப்புறாவதுவும்,
பறித்துப்போட்ட இலையில் எறும்பும்கருத்தாயேறிற்ற [தன்மேல்;

3. காற்றினாலே இலையும் கரையை அடைந்திடவே,
ஏற்றத்தாழ்வில்லாமலே லகுவாய் இரைதேடச்சென் [றதது

4. வேடன் வெகுவேகமாய் வில்லுங்கையுமாய்வந்து,
மாடப்புறாவடிக்க எண்ணியேமாயமாய் நின்றானவன்;

5. இழுத்துவில்லைப்பிடிக்க எறும்புமதைப்பார்த்து,
விழும்படியாக எண்ணி வேகமாய் விசையுடன் கடிக் [கவே;

6. கடித்தவுடனே வேடன் கதறிஅப்பாலேவிழ,

துடித்தவன் சத்தங்கேட்டு புருவும் துரிதமாய் ஓடினதே;

7. நாமுபகாரஞ்செய்தால் நமக்குபகாரம்செய்வார்,
தீமையை எண்ணுமலே என்றுமே தியானிப்போம் ஈசனையே.

ட்ராயிங்.

எறும்பு, ஆறு, இலை, அம்பு, வில், புருவின் கால், தலை, இறகு, கோடுகளினுல் மனிதன்போல் காண்பித்தல்.

கிண்டர்கார்ட்டன்.

களிமண்வேலை:—புருவின் தலை, கால்; ஆறு (களிமண்ணை கரையாய் வைத்துக்காண்பித்தல்,) இலை, ஆள்.

குச்சிவேலை—வில், அம்பு.

Part II.

இரண்டாம்பாகம்

I-வது வகுப்பு.

ஓனாயும் ஆட்டுக்குட்டியும்-5.

கதை.

ஒரு காட்டில் ஓர் ஓனாய் இருந்தது அதற்குத்தாகமாயிருந்ததினால் ஜலமிருக்கப்பட்ட இடத்தை தேடிக்கொண்டுபோயிற்று. கடைசியில் ஓர் ஆற்றைக்கண்டதும் அதிக ஆவலுடன் அதில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது. அதே ஸமயத்தில் ஒரு ஆட்டுக்குட்டியும் அவ்விடத்திற்குத்தண்ணீர் குடிக்கவந்தது. ஆட்டுக்குட்டி தண்ணீர் குடித்துக் கொர்ண்டிருந்தபொழுது ஓனாய் அதைக் கொன்றுதின்றுவிடவேண்டுமென்றுஎண்ணங்கொண்டது. உடனே அது ஆட்டுக்குட்டியைப் பார்த்து "நீ ஏன் நான்

குடிக்கும் ஜலத்தைக்கலக்கினாய்" என்றுகேட்டது. அதற்கு ஆட்டுக்குட்டி "தங்களிடத்திலிருந்து தண்ணீர் என்னிடத்திற்கு ஓடிவருகிறது. அதுவுமல்லாமல் நானும் அவ்விதம்செய்யவில்லை" என்றுபணிவாய்ச்சொல்லிற்று. ஓனாய் மறுபடியும் இதிருக்கட்டும் "நீ ஆறுமாதத்திற்குமுன் என்னை வைதாயாமே அது என்?" அதற்கு ஆட்டுக்குட்டி "நான் பிறந்து நான்கு மாதங்கூட இன்னுமாகவில்லையே, நான் எப்படித்தங்களை அப்பொழுது வைதிருக்கக்கூடும்" என்று வணக்கமாய்ச் சொல்லிற்று, அதற்கு ஓனாய் "நீ வையாவிட்டாலென்ன? உன்பெற்றோர் வைதிருப்பார்கள்; அதற்கும் நீ தான் கடமைப்பட்டவன்" என்று அதன்மேல் பாய்ந்து கொன்று தின்றுவிட்டது. ஆகையால் துஷ்டரைக்கண்டால் தூரவிலகவேண்டும். துஷ்டர்கள் பொய்யான சாக்குப்போக்குகள் சொல்லி பிறருக்குத் தீங்குசெய்வார்கள்.

பாட்டு.

இராகம்-நவரோஸ்-தாளம்-ஆதி-மெட்டு-வாசுதேவனே [வந்தாளுமெந்தனே.

1. காடுதனிலோர் கறுத்த ஓனாயும்,
தேடித்திரிந்தது திகைத்து நிற்கையில்;

2. ஆவலுடனே ஆற்றைக்கண்டதும்,
கூவிக்கொண்டோடி குடித்தது நீரை;

3. அந்தநேரத்தில் ஆட்டுக்குட்டியும்,
சந்தோஷமாக ஜலத்தைக்கண்டதும்;

4. தாகத்தாலது தவித்துவாடியே,
வேகமுடனே விரும்பிக்குடித்தது;

5. ஆட்டை ஓநாயும் அதிககோபத்தால்,
சேஷ்டைகள்செய்து திரும்பிப்பார்த்ததை;

6. குடிக்கின்றநீரை குறும்பால் கலக்கிறாய்,
துடிக்கும்படிநான் தூரத்திஅடிக்கிறேன்;

7 என்றுசொன்னதும் எளிய குட்டியும்,
கொன்றிடுமென்று கூவிஉரைத்தது;

8. உம்மிடமிருந்து ஓடிவருகின்ற,
செம்மைநீரையும் சீராய் அருந்தினேன்;

9, ஆறுமாதமுன் அதிகம் வைதாயாம்,
கூறுவாய் பதில் நீ குற்றமில்லாமல்;

10. நான்குமாதமுன் நான்பிறந்திலே,
ஏன் தூற்றுகிறீர் எந்தனை வீணாய்;

11, நீயில்லாவிடில் நின்பெற்றோரென்றது,
பாய்ந்ததைக்கொன்று பையத்தின்றது;

12. ஸகலதுஷ்டரும் சாக்குகள் சொல்லி,
திகைக்கும்படியாய் தீங்குசெய்வார்கள்;

ட்ராயிங்

ஓநாயின்:—தலை, கால், வால், கோடுகளினால் உருவம்,
ஆட்டுக்குட்டியின்:—தலை, கால், கோடுகளினால் உருவம்;
[ஆறு; மரங்கள்;

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:—ஓநாயின் தலை, கால், உருவமுழுவதும்;
ஆட்டுக்குட்டியின்:—தலை, கால், உருவமுழுவதும்; ஆறு;
(கட்டைகளைக்கொண்டு காண்பிக்க).

காக்கையும்-நரியும் 6.

கதை.

ஓர் ஊரில் ஒருகடையில் ஒருவன் வடைவிற்றுக் கொண்டிருந்தான். ஒரு காகமானது திருட்டுத்தனமாய் ஒரு வடையைக் கௌவிக்கொண்டுபோய் ஒரு மரத் தின்மேல் உட்கார்ந்தது. இதைப் பார்த்துக்கொண்டி ருந்த ஒரு நரி அந்தவடையை எவ்விதமாகவாவது பிடுங்

கிக்கொள்ள நினைத்தது. பிறகு அது காக்கையினிடத்திற்கு சமீபத்தில் வந்து உட்கார்ந்து, அதைப்பார்த்து "ஏ காக்கமே! உன்னை எல்லோரும் அழகில்லாதவனென்கிறார்கள்; ஆனுல் உன்னைவிட அழகான ஒருவருங் கிடையாது; அவ்வளவு அழகுள்ள உனக்கு பாடத்தெரிந்து ஒருபாட்டுப்பாடினையானுல் இன்னும் அதிக அழகை உண்டுபண்ணும்" என்று சொல்லிற்று. உடனே காகமானது தன்னைவிட ஒருவரும் அழகாயிருக்கமாட்டார்கள் என்று நினைத்துகர்வங்கொண்டு, கா, கா, என்று கத்திற்று. உடனே வாயிலிருந்த வடை கீழேவிழ நரி அதைத்தின்றுவிட்டு காக்கையை ஏளனம் செய்துகொண்டு ஓடிப்போய்விட்டது. ஆகையால் நாம் ஒருவரை ஏமாற்றினுல் நம்மை ஒருவர் ஏமாற்றிவிடுவார். பிறரை மோசஞ்செய்பவர் தாமே மோசம்போவார்.

பாட்டு

இராகம்—காபி—தாளம்—சாபு-மெட்டு—காலடிச்சிந்து,
பாலைவாய்க்கமுகில்;

1. கடைதனில் ஒரு காக்கைசென்று வடையைவாயில் [கௌவிக்கொண்டு,
கடையியாயோர் மரத்தைநோக்கிச்சென்றது-யாரும்,
காணுமலோர் கிளையில் வந்துட்கார்ந்தது;

2. இந்தவடையைப் பிடுங்கிக்கொள்ள, வந்திருந்ததோர் நரி [யும் வந்து,
தந்திரமாய் இதனை எய்க்க எண்ணியே-பிறகு,
சொந்தம்போல் அதனைப்பார்த்துக் கூவியே;

3. அருமையுள்ள காக்கையே நீ அழகுவாய்ந்திருக்கிறாயே;
கரியவளென்றெல்லோரும் உனை அழைக்கிறார்-உலகில்
காணுவார் இதனைப்பொய்போல் நினைக்கிறார்;

4. அழகுவாய்ந்த காக்கையே உன்-அன்புடையவாக்கினிலே,
அழகாய் ஒருபாட்டுதனைப்பாடுவாய்—மிக,
அற்புத ராகத்தோடிசைபோடுவாய்;

5. இந்தவிதம் சொன்னவுடன் இக்காகம் கர்வமோடு,
விந்தையாக கா, கா, வென்று பாடவே வடையும்,
விரைவாக வாயினின்றும் வீழ்கவே;

6. நரியும் வடையைத்தின்றுகொண்டு-நலமாய்ப்பசியாற்றிக்கொண்டு,
அறிவிலா காக்கைதனைக்கண்டு ஏசவே—காகம்,
அதனைக்கேட்டு மனமுடைந்து ஏங்கிற்று;

7 ஒருவரை ஏமாற்றினல் மற்றொருவர் நம்மை ஏய்த்திடுவார்,
ஒருவர்க்கும் தீங்கிழைத்தலொண்ணாது—இது,
ஒருக்காலும் கெட்டதாகமாட்டாது.

டிராயிங்.

காக்கையின் -தலை-கால்(விரல்களுடனே) அங்கமுழுவதும்;
நரியின்:—தலை,கால்,வால்,(கோடுகளால்) அங்கமுழுவதும்;
மரம், வடை, தட்டில்வடை;

களிமண்ணால்:- வடைசெய்தல், தட்டுமோதிரிசெய்தல்;
குச்சிகளினால்- தட்டுசெய்தல்;
காக்கை, நரி, இவைகளின்:— தலை, கால், முழுஉருவமும்;

குடியானவனும் பொன்வாத்தும் 7

கதை.

ஓர் ஊரில் ஒருகுடியானவன் இருந்தான். அவன் பொன்வாத்து ஒன்றை வளர்த்துவந்தான். அது தினந்

தினம் ஒரு பொன்முட்டை இட்டுவந்தது. அவன் அந்தப்பொன்முட்டைகளை யெல்லாம் கடையில் கொண்டுபோய் விற்று வேண்டிய சாமன்களைவாங்கி ஜீவித்துவந்தான். இப்படி நாளடைவில் பலமுட்டைகளைவிற்று அவன் பணக்காரனுனான். இவ்வளவுபணமும் கோடிக்கணக்காய் ஆகாதது கண்டு, பின்வருமாறு யோஜித்தான் "இந்தவாத்தின் முட்டையை ஒவ்வொன்ருக அடைவதனுல் அதிகப்பணம் சேரமாட்டாது; அதின் வயிற்றைக்கிழித்து எல்லாமுட்டைகளையும் ஒரேஸமயத்தில் அடைந்தால் தான், தக்கமனிதனுக ஆகலாம்" என்று எண்ணிமுடித்தான். அது போலவேகத்தி ஒன்றை எடுத்து அதன்வயிற்றைக்கிழித்தான். அதில் அன்று இட்டவேண்டிய ஒரு முட்டையைத்தவிர வேறென்றுமில்லை. உடனே, அவன் வயிற்றிலும், தலையிலும் அடித்துக்கொண்டு "ஐயோ என் பொன்வாத்தை இழந்தேனே! ஆத்திரக்காரனுக்குப்புத்தி மட்டு; என்பதை இப்பொழுதுதான் நான் தெரிந்துகொண்டேன்" என்று அலறி அழுதான். ஆகையால் ஒவ்வொரு விஷயத்தையும் யோஜித்துச்செய்யவேண்டும்.

பாட்டு.

இராகம்--கல்யாணி--தாளம்--ஆதி-மெட்டு--மார்கழிமாதம் திருவாதிரை-நந்தன் சரித்திரம்.

1. குடியானவனெருபொன்மயமான-குள்ளவாத்தைவள
[ர்த்தான்,

விடியற்காலம் பொன் முட்டையிட்டதும்-விற்று வந்
[தான்தினமும்;

2. இப்படியாக முட்டையை விற்று எளியவன் பணம்சே
[ர்த்தான்;

தப்பாமல் அவன் தருந்தயோஜனைகள்-தானாகவேசெ
[ய்தான்;

3. கொஞ்சங்கொஞ்சமாய் பணமதைச்சேர்த்தால்-கோடி
[பாகுமென்றே

செஞ்சலத்தாலவன் அதிக ஆசையை-சடுதியிற்கைக்கொ
[ண்டான்;

4. சீக்கிரம் வளத்தைச்சேர்த்துவிடவே சிறந்தயோஜனை
[செய்து;

ஆக்கிரமத்திருல் அநேகமுட்டையை-அடையவே ஆ
[சைகொண்டான்;

5. கூர்மையான ஒருகத்தியை எடுத்து-குறிப்பாயறுத்தி
[டவு;

நேர்மையாக ஓர்முட்டையைத்தவிர சேர்ந்தது ஒன்
[றுமில்லே;

6. ஐயோநானுமே பேராசையினுல்-அருமையை இழந்தே
[னென்று,

கையைத்தலைமேல் வைத்துக்கொண்டவனும்-கதறிக்க
[தறி அழுதான்;

7. அதிகாசையினுல் எந்தப்பிராணியும் அதிக நஷ்டம
[டையும்;

மதியினுல் நாமும் விதியை வெல்வதும்-மாண்புடைய
[செயலே.

டிராயிங்

வாத்தின்: தலை, கால், முட்டை, அங்கம்முழுவதும் (கோடுகளினால்)

மனிதன்; (கோடுகளினால் காட்டவும்)

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:- வாத்தின்- தலை, கால், அங்கமுழுவதும், [முட்டை;

மனிதன உருவம்; (கோடுகளினால்)



தேக்குமரமும் நாணலும் 8.

கதை.

ஒரு ஆற்றங்கரையில் தேக்குமரமும், நாணலும் வளர்ந்திருந்தன். அப்பொழுது தேக்குமரமானது நாணலைப்பார்த்து "உனக்கென்ன பலமிருக்கிறது? நீயோ அற்

பமானபுல், உனமேல் காற்றடித்தால் தலைசுற்றி கீழேவிழுந்து, தரையோடு தரையாய்க்கிடப்பாய்; உனக்கு எழுந்திருக்கசக்தியேது" என்று சொல்லிற்று. அதற்கு நாணல் தேக்குமரத்தைப்பார்த்து "என்பலம் அற்பந்தான், எனக்குசக்தியென்பதே கிடையாது ஆனாலும் பலமானகாற்றடிக்குமானால் இருவருக்கும் ஒரே கதிதான்" என்று சொல்லிற்று. அதற்குத்தேக்குமரம் "நீ என்பலத்தை அற்பமாகஎண்ணிப்பேசுகிறாய் என்காலோ பாதாளம் வரையில் போயிருக்கிறது, என் தலையோ மேகமண்டலத்தை எட்டிப்பிடிக்கிறது; அப்படிக்கிருக்க என்பலத்தை அற்பமாக நீ எண்ணினது உன்புத்திக்குறைவால்தான்" என்றது இப்படிச்சொல்லி வாய்மூடுமுன் பலமானகாற்றடித்தது. உடனே தேக்குமரம் அடியோடு பெயர்ந்து திடீரென்று நிலத்தில் விழுந்தது. இந்தக்காற்றுக்கெல்லாம் நாணல் தரையோடு தரையாயிருந்து, காற்றோய்ந்த பிற்பாடு தலைநிமிர்ந்து, தேக்குமரத்தைப்பார்த்து, "உன்பலமும் என்பலமும் இப்பொழுதுதான் நன்றாகத்தெரிந்தது; உன்பலத்தை நீயேமெச்சிக்கொள்வதினால் என்ன பிரயோஜனம், பிறர் அல்லவோ புகழவேண்டும்; இனி அவ்விதம் கர்வப்படமாட்டாய்" என்று நினைக்கிறேன் என்றது. ஆகையால் நாம் கர்வங்கொள்ளக்கூடாது.

பாட்டு.

இராகம் சுருட்டி-தாளம்-ரூபகம்-மெட்டு-பித்தாபிறைசூடி

1. திருஷ்டியினால் நாணற்புல்லை தேக்குமரம் பார்த்து,
கருத்திழந்து கதறிடுவாய் காற்றடித்தபோது;

2. இந்தவிதம் சொல்லலுமே ஏக்கங்கொண்டு நாணல்,
எந்தவிதம் என்செயலை எடுத்துரைப்பேனென்று;

3, விசனத்துடனிருக்கக்காற்று வெகுவேகமாய் அடிக்க,
விசையுடனேமரமொடிந்து வெகுவேகமாய்விழவே;

4. காற்றடித்தபோது நாணல்கவிழ்ந்துகொண்டுஇருந்து,
ஏற்றமாக எழுந்தபின்பு எதிரேயுள்ளதேக்கை;

5 செருக்குடனேநின்ற பெருந்தேக்குமரமே நீ,
குறுக்குப்பாலம் போட்டதுபோல் குப்புறவேவிழுந்
[தாய்;

6. என்றுஅதை இகழ்ந்தவுடன் ஏளனங்கள்செய்து,
நலமுய்மதிதனை எடுத்து நவின்றதுகாண் நாணல்;

7. அகங்காரம் கொண்டவர்கள் அந்தக்ஷணமழிவர்,
அதனாலினி அகங்காரத்தை அகற்றிடுவதழகே.

ட்ராயிங்.

தேக்குமரம். இலை, நாணற்புல்;

கிண்டர்கார்ட்டன்.

குச்சிகளால்:—மரம்போல்செய்தல்;
களிமண்ணால்:—இலை செய்தல்;

Part III.

மூன்றும்பாகம்.

2-வது வகுப்பு.



சிங்கமும் நான்குஎருதுகளும்.9.

கதை.

ஒரு காட்டில் நான்கு எருதுகள் சிநேகமாயிருந்தன. அவைகள் ஒவ்வொன்றும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் ஒரே புலத்தில் மேய்ந்துகொண்டிருந்தன. இப்படியிருக்கையில் ஒருநாள் ஒரு கிழச்சிங்கம் இறை தேட சக்தியில்லாமல் எருதுகள் இருக்கப்பட்ட இடத்தைநோக்கி வந்தது. வந்ததும்சிங்கம் எருதுகளைத் தின்றுவிடவேண்டுமென்கிறஎண்ணத்துடன் அவைகளின்மேற் பாய்ந்தது. அப்பொழுது எருதுகள் நான்கும்ஒரே பக்க

மாய் முகங்களைத் திருப்பிக்கொண்டு முட்டவரவே, சிங்கம் பயந்தோடிப்போய் குகைக்குள் புகுந்துகொண்டது. பிறகு கொஞ்சகாலம் சென்றவுடன் எருதுகள் ஒவ்வொன்றும் தான்தான் பலிஷ்டனென்று ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக்கொண்டு வெவ்வேறு இடங்களுக்கு ஓடிப்போய்விட்டன. இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டு சிங்கமானது ஒவ்வொரு எருதையும் இலகுவாய்க்கொன்றுதின்றுவிட்டது. ஆகையால் சேர்ந்துவாழ்வதே சிறந்தவலிமை.

பாட்டு

இராகம்-முகாரி-தாளம்-ஆதி-மெட்டு-அகிலபிரபஞ்சம்;

1. நான்கு எருதுகள் ஒன்றாய்க்கூடி - நலமுடன்புலந்
[தேடி;
பாங்குடன் பசும்புற்களைத் தின்று பலமுடன் திரிந்த
[னவே;

2 வயதுசென்ற ஓர்சிங்கம் பசியால்-வந்ததுபுலம்நாடி,
உயர்ந்தகர்ஜனை செய்துகொண்டுஓடிப்பாய்ந்தவுடன்;

3. எருதுகள் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு-எதிர்த்துச்ச
[ண்டையிட,
சிறிது நேரத்தில் சோர்வடைந்து-சென்றது குகைக்
[குள்ளே;

4. கொஞ்ச நாட்களில் சிநேகமழியவே-கூட்டத்தை
[விட்டோடி;

சஞ்சலத்துடனே எருதுகளெல்லாம் ஜல்தியாய்ச் சென்றனவே;

5. கிழமாயிருந்த சிங்கமதுவும்-கேட்டவுடன் மகிழ்ந்து,
பழம்நழுவி பழுதுபடாமல்-பாலில் வீழ்ந்ததுபோல்;

6. தேடிச்சென்று ஒவ்வொன்றாக-சில தினங்களில் கொன்று,
நாடியவைகளைத் தின்றுவிட்டு-நலமுடன் சென்றதது;

7. சேர்ந்து வாழ்வதே முக்கியமான-சிறந்த பலமாகும்,
கூர்மையான புத்தியினால்-குறிப்பாயறிய வேண்டும்;

டிராயிங்.

சிங்கத்தின் முகம்போல் எழுதவும் (கோடுகளினால்)
கால்களின் அமைப்பைக்காட்டவும்.
எருதின்:— தலை, கால்; (உருவமுழுதும்)

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:—
சிங்கத்தின்:- தலை, கால்;
எருதின்:- தலை, கால்; (உருவமுழுவதும்)

பேராசையுள்ள நாய் 10.

கதை.

ஓர் ஊரில் ஒருநாய் இருந்தது. அதற்கு அதிகப்பசியாயிருந்தது. ஊரெல்லாம் ஆகாரத்திற்காகத்தேடிப்பார்த்தும், ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் அது விடியற்காலையில் கடைத்தெருவுபக்கம் போயிற்று. அவ்விடத்தில் அது ஒரு மாம்ஸத்துண்டைக்கண்டெடுத்து, அதை அங்கேயே தின்றால் இன்னொருநாய் பிடுங்கிக்கொள்ளும் என்றுநினைத்தது. பிறகு அது அவ்விடம் விட்டுபுறப்பட்டு வேறுஇடத்திற்குச்செல்லும்போது, வழியிலிருந்தஒருஆற்றுப்பாலத்தின்மேல் போகவேண்டியதாக விருந்தது. அந்தப்பாலத்தின்மேலேறிப்போகையில் நாய் ஜலத்தைப்பார்த்தது. தண்ணீரில் தன்நிழல் தோன்றவே, அதை வே

றொரு நாய் என்று எண்ணி அதின் இரைச்சியைப் பிடுங்கிக்கொள்ள நினைத்தது. உடனே அவ்விதம்செய்ய தன்வாயைத்திறக்கவே ஆதன் வாயிலிருந்த இறைச்சித் துண்டு தண்ணீரில் விழுந்து அமிழ்ந்து போயிற்று. நாய் ஏமாந்துபோய் அன்றுமுழுவதும் ஆகாரமில்லாமல் பட்டினியாகவே கிடந்தது. ஆகையால் நாம் பிறசொத்துக்குப்பேராசைப்படக்கூடாது. அதிக ஆசை அதிகநஷ்டம்.

பாட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்-மெட்டு.
மாதுளம்பழம் பழுத்திருக்குது.

1. அதிக ஆசையுள்ள ஓர்நாய் அதிகப்பசியினால்,
கதி இல்லாமல் சுற்றிப்பார்த்தும்-கண்டதொன்றிலே;
2. சாலேமுழுதும் தேடித்தேடியும்-சரிப்படாமலே,
காலையிலது கடைப்பொழுதில்-கடைக்குச்சென்றது;
3. கடைத்தெருவில் இறைச்சியையது-கண்டுகௌவியே,
இடையிலிங்கே இரையைத்தின்றால்-ஏமாந்திடுவோம்;
4. என்றுஎண்ணி வந்தவழியே-இடத்திற்குச்செல்ல,
நன்றாயிருந்த பாலமொன்றில்-நடந்தது தனியே;
5. பாலத்தின்கீழ் ஓடும்நீரை-பார்க்கவேயது,
*ஆலத்துள்ள நாயின்வாயில்-அமையுமிறைச்சியை;
6. அந்தநாயும்அடித்துக்கொள்ள-அன்பாய்எண்ணியே
சந்தோஷமாய் வாயைத்திறக்க-ஜலந்தியில்விழவே;

---

* ஆலம்=ஜலம்,

7. ஆற்று நீரில் விழுந்த இரையும்-அமிழ்ந்துபோகவும்,
வேற்று வழியில்லாமலே-விரைந்து சென்றது;

8 அதிக ஆசை உள்ளவர்கள்-அறியாத்தன்மையால்,
அதிக நஷ்டமடைந்து தாமும்-அவதிப்படுவரே.

டிராயிங்.

நாயின்:-தலை, கால், அங்கமுழுவதும் (கோடுகளால்)
இறைச்சித்துண்டு; கடைகள் (கோடுகளால்)
ஆறு-(வளைவுகோடுகளால்)

கிண்டர் கார்ட்டன்.

களிமண்ணால்:-நாயின், தலை, கால், அங்கமுழுதும், இறை
[ச்சி;
கட்டைகளால்:-ஆறு, கடைத்தெருவு;

பட்டிக்காட்டானும்-பாம்பும். 11.

கதை.

ஒரு சிறுகிராமத்தில் ஒருகுடியானவன் இருந்தான். அவன் விடியற்காலையில் எழுந்து வயலுக்குச்சென்றான். அவ்விடத்தில் ஒரு நல்ல பாம்பு குளிரால் விறைத்திருந்தது. அதை அவன் எடுத்துக்கொண்டு வீட்டிற்குவந்து எரிந்துகொண்டிருந்த அடுப்பின் கிட்ட குளிர்காயவிட்டான். பிறகு அதற்கு அதிகப்பசியாயிருக்குமென்று நினைத்து பக்கத்துவீட்டுக்கு பால்வாங்கப்போனான். அதற்குள் பாம்புக்கு குளிர்நீங்கி பலமுண்டாகி, தன்னருகிலிருந்த குடியானவன் குழந்தையைக்கடிக்கப்போயிற்று, அப்பொழுது அக்குழந்தை அலறிக்கொண்டு அழவே பக்கத்து வீட்டுக்குப்போனவன் பால் வாங்கிக்கொண்டு உடல்பதறி ஓடிவந்து பார்த்தான். அப்பொழுது குழ

ந்தையை பாம்பு கடிக்கவருவதைப்பார்த்து, "உன்பாழான வயிற்றுக்குப்பால் வாங்கப்போனேனே, அதற்குள் என் குழந்தையைக்கடிக்கவா வந்தாய் இனி நீ உயிரோடு இருக்கலாகாது" என்று அதைத்தடியினல் அடித்துக்கொன்றுவிட்டான். ஆகையால் நாம் துஷ்டருக்கு உபகாரம் செய்தால் அவர்கள் அபகாரம் செய்வார்கள்.

பாட்டு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி-மெட்டு-முத்திநெறி அறியாத.

1. பட்டிக்காட்டான் வயலொன்றில் பாம்பொன்றைக் [கண்டவுடன்,
தட்டித்தட்டி அதை வெருட்ட-தடிதனைப்போல் கிட (ந்ததது;
2. குளிர்ச்சியினல் விறைத்திருக்க-குடிசைக்குக்கொண்டு (வந்து,
குளிர்காய அடுப்பண்டை-கொண்டுவந்து விட்டுவிட் (டான்;
3. சூடு பட்ட மாத்திரத்தில்-சுறு சுறுப்பாய் எழுந்திரு (ந்து,
தாட்டீகமாய்க் கோபங்கொண்டு--தைரியமுடன்ஓடிவ (ந்து;
4. படுத்திருந்த குழந்தைதனை-படமெடுத்து கடிக்கவர,
வெடவெடத்து பயத்தினலே-வீறிட்டுக்கதறிடவும்;

5. பக்கத்து வீடதனில்-பாம்புக்காக பால் வாங்கி,
பக்குவமாய் வந்தவுடன்-பலகூச்சல்களைக்கேட்டான்;

6. ஓடிவந்து பார்த்திடவே-உண்மைதனைத் தெரிந்தவ
[னும்,
நாடிவந்து நன்மகனை-நலமுடனே அணைத்துக்கொ
[ண்டு;

7. பலமுள்ள பாழும்பாம்பே-பரிவுடனே காப்பாற்றி,
நலமாக நானுனக்கு-நற்பாலும் வாங்கிவந்தேன்;

8, துஷ்டஜெந்து வானதினால்--துடுக்குடனே கடிக்கவ
[ந்தாய்,
கஷ்டகாலம் வந்ததென்று--கழிகொண்டு அடித்துக்
கொன்றான்;

9. உருக்கமுடன் துஷ்டருக்கு உபகாரம் செய்திட்டால்
இரக்கமற்ற அரக்கரைப்போல்-இடுக்கண்கள் செய்திடு
[வார்.

ட்ராயிங்.

ப்ாம்பு, வயல், அடுப்பு, பாத்திரம்; மனிதன் உருவம் (கோ
டுகளால்)

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:- அடுப்பு, ப்ாம்பு, பாத்திரம்;
கட்டைகளால்:-வயல், அடுப்பு,



பிரயாணியும்-கரடியும். 12.

கதை.

ஓர் ஊரில் இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களிருவரும் பால்யமுதல் சினேகிதர்களாகவே இருந்தார்கள். ஒருசமயத்தில் அவர்களிருவருக்கும் அதிக தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குப்போகும்படி நேரிட்டது. அப்பொழுது அவர்கள் ஒரு காட்டின்மார்க்கமாய்ப்போகையில் ஒருவன் மற்றவனைப்பார்த்து "நாமிருக்குமிடத்திற்கு புலியாவது, கரடியாவது வந்ததானால் என்ன செய்கிறது" என்று கேட்டான். அதற்குமற்றவன் "எந்தமிருகம் வந்தாலும் வரட்டும், நான் அதை அடித்துக்கொன்று விடுகிறேன், நீ ஒன்றுக்கும்பயப்பட வேண்டாம்"

என்று பதில் சொன்னான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே ஒரு கரடி வந்தது. உடனே தைரியசாலி, ஓரே ஓட்டமாய் ஓடி ஒருமரத்தில் ஏறிக்கொண்டான். பயந்தவனோ கரடியைக்கண்டதும் ஒன்றும் தோன்றாமல் மூர்ச்சித்துக் கீழேவிழுந்து விட்டான். கரடி அவனிடம் வந்து அவனை முகர்ந்து பார்த்துப்பிணம் என்று எண்ணிப்போய்விட்டது. பிறகு மரத்திலிருந்தவன் கீழே இறங்கிவந்து தன் அன்பனைப்பார்த்து சிநேகிதனே! கரடி உன் காதின்கிட்டவந்து என்ன ஸமாசாரம் சொல்லிற்று" என்று கேட்டான். அதற்குமற்றவன் "ஆபத்துக்காலத்தில் தன் உயிர்பெரிதென்று ஓடிப்போகிறவனோடு ஒருநாளும் ஸ்நேகம் செய்யாதே" என்று சொல்லிப்போயிற்று என்றான். அதனால் மற்றவன் தான் செய்தது தப்பென்று நினைத்துவெட்கமடைந்தான். ஆகையால் நாம் ஆபத்துவேளையில் பிராணிகளுக்கு உதவிசெய்யவேண்டும்.

பாட்டு.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஆதி--மெட்டு-மாயாகானி;

1. பாலர்இருவர் கூடிக்கொண்டு-பக்கத்து ஊருக்குசெல்
[லவே,
காலமில்லாகாலத்தில்-காட்டின் வழியே போனார்கள்;
2. மந்தபுத்தி யுள்ளவனும்-மகாபலிஷ்டன் தானென்று,
பந்தயங்கூறிப்போகையிலேபதுங்கியிருந்தவோர்கரடி;

3 விரைவாய் வரவேஇவர்களிடம் வெருகூதிசொண்டார்
[இருவர்களும்;
தைரியசாலி என்றவனும் தடதடவென்று ஓடி ஒரு;

4. பக்கத்திலிருந்த மரத்திலேறி பதுங்கியிருந்தான் இலை
[மறைவில்,
அக்கணம கரடிதனைக்கண்டு அலறிவிழுந்தான் புவி
[மீது;

5 விழவேகரடிவிரைவுடனே விருப்பமுதார்ந்து பார்த்த
[வுடன்,
*அழனம் என்றே எண்ணியது அப்பால்அகலஅவன்
[கண்டு;

6. மரத்தினின்றும்இறங்கிவந்து வணக்கமுடனவனிடத்
[தில்,
கரடிவந்துன் கீர்தண்டை கருத்தாய்ச்சொன்னது
[யாதென்றான்;

7 ஆபத்தில்உதவா ஸ்நேகிதனை அரைக்ஷணமேனும் நம்
[பாதே,
பாபமெல்லாம்புரிவனென்று பகர்ந்ததென்றான் வெட்
[கினனே;

8. ஆகையால்நாமும் யாவர்க்கும் ஆபத்துவேளையில் உத
[விசெய்ய,
*ஓகையால்என்றும் முயலவேண்டும் ஒருமையுடனே
[எல்லோரும்,

---

*அழனம்=பிணம்; *ஓகை=மகிழ்ச்சி,

ட்ராயிங்

மனிதன் உருவம் (கோடுகளால்)
கரடியின்:—தலை, கால், உருவமுழுதும் (கோடுகளால்)
மரம்; மரத்தின்மேல் மனிதன்.

கிண்டர்கார்ட்டன்.

குச்சிகளால்:—மரம்
களிமண்ணால்:— கரடி, மனிதன்.

Part IV.

மூன்ருவது வகுப்பு.

நான்காம் பாகம்.

இடைப்பையனும்-புலியும் 13.

கதை.

ஒரு ஊரில் ஒரு இடைப்பையனிருந்தான். அவன் தினந்தினம் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிக்கொண்டுபோய் மேய்த்து வருவது வழக்கம். இப்படி இருக்கையில் ஒரு நாள் அந்த இடைப்பையன் சமீபத்தில் வேலைசெய்து கொண்டிருந்த மனிதர்களை எமாற்றவேண்டும் என்று நினைத்து "ஐயோ புலி! புலி! ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!

என்று உரத்துக்கூவினன். அப்பொழுது அங்கே வேலை செய்துகொண்டிருந்த மனிதர்களெல்லோரும், பையனைக் காப்பாற்ற ஓடிவந்தார்கள், எல்லோரும் கிட்ட வந்தவுடன் பையன் கைகொட்டிச்சிரித்து அவர்களைப்பரிகாசம் செய்தான். உடனே அவர்கள் பையன் பொய்சொல்லித் தங்களை ஏமாற்றினன் என்றுநினைத்து அவரவர்கள் இடத்திற்குப்போய்விட்டார்கள். பிறகு கொஞ்சநாள் ஆனதும் நிஜமாகவே புலிவந்தது. அப்பொழுது பையன் "ஐயோ புலி! புலி!" என்று கூக்குறலிட்டுக்கதறினன். என்ன கதறியும் பையன் முன்போல தங்களை ஏமாற்றுவான் என்று எண்ணி ஒருவரும் அவனுக்கு உதவிசெய்யவரவில்லை. புலிவந்ததும் பையனைக்கொன்றுவிட்டு அவனுடைய ஆடுகளையும் சின்னபின்னப்படுத்திவிட்டுப்போயிற்று; ஆகையால் விளையாட்டுக்காகவும் பொய்சொல்லக்கூடாது.

பாட்டு.

இராகம்—இந்துஸ்தானி-தாளம்-ஆதி,

மெட்டு-அள்ளி அள்ளிகுடிக்கும் முதல்இரண்டடி

1. காடுதனில் ஆடுகளை மேய்த்துவந்தான் வழக்கமாய்,
நாடியோர் புலத்தைப்பையனும்—இடைப்பையனும்;
2. ஏவியவேலைசெய்து கூலிவாங்குமனிதரை,
கூவிப்புலி புலியென்றான் மனம் தளர்ந்தான்

3 அண்டையில் வேலைசெய்த அந்தந்தமனிதரும்,
*குண்டோட்டமாக ஓடினார்—புலியைத்தேடினார்;

4. பந்தமாய் உதவிசெய்யவந்தவரைக்கண்டு,
விந்தையாகவே நகைத்தான்—மனங்களித்தான்;

5. வேடிக்கைசெய்தானென்று வந்தமானிடரும்,
கூடிக்கொண்டேசென்றாரே-கோபம்கொண்டாரே;

6. ஆநந்தமாயவனும் அநேகநாள்வரை,
தானாகபாடியாடினான்-விளையாடினான்;

7. மெய்யாய்ப்புலி வரவும்-மெய் நடுங்கிடவே,
ஐயோ புலி புலி என்றான்-கூவிச்சென்றான்;

8 பரிகாஸம்போல எண்ணி-பரிவுடனவர்களும்,
அறிந்தேவராமலிருந்தார்-அதனைத்தெரிந்தார்;

9. ஒய்யாரமாய்ப்புலியும் உள்பூந்து மந்தையில்,
பையனோடாட்டைக்கொன்றது-வழியே சென்றது;

10. அடாத பொய்க்களையே விளையாட்டாகச்சொன்னால்,
படாத பாடுபடுவார்-எங்கும் கெடுவார்;

ட்ராயிங்.

ஆட்டின்:-முகம்-கால்-அங்கமுழுவதும்;
புலியின்:-முகம்-கால்-அங்கமுழுவதும்;
மனிதன் உருவம் (கோடுகளால்.) அடர்த்தியான மரங்கள்

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:-ஆடு, புலி, மனிதன்;

---

*குன்றோட்டம் என்பது குண்டோட்டமென, தொடை நோக்கித்திரிந்தது.

சிங்கமும் சுண்டெலியும், 14.

கதை.

ஒரு காட்டில் சிங்கமொன்று இருந்தது. அது இரைக்காக இராத்திரி முழுவதும் வேட்டையாடினதினால் அதற்கு அதிகக்களைப்பாயிருந்தது. அதனால் அது ஒரு மரத்தடியில் படுத்துத்தூங்கிற்று அவ்விடத்திலிருந்த சுண்டெலிகள், ஆகாரத்திற்காக வெளியே வரும்பொழுது சிங்கம் துங்குகிறதை கவனிக்காமல் அதன்மேலேறிச்சென்றன. அப்பொழுது சிங்கம் விழித்து அவைகளில் பிரதானமான ஒன்றைப்பிடித்துக்கொண்டு "ஏசுண்டெலியே! ஏன் என் தூக்கத்தைக்கலைத்தாய்? நான் மிருகேந்திரனென்று உனக்குத்தெரியாதா? உன்னை இப்பொழுதே நசுக்கிவிடுகிறேன் பார்" என்று உரைத்தது. உடனே சுண்டெலி சிங்கத்தைப்பார்த்து, "நான் தெரியாமல் இப்படி

ச்செய்தேன் இனி அவ்விதம் செய்யேன். என்னை நீங்கள் நசுக்கினதால் தங்கள் மேலான கால் இரத்தமாய்ப் போகுமேதவிர ஒருவித பிரயோசனமு மடையமாட்டீர்கள்; என்னை இந்தத்தடவை மன்னித்து விட்டுவிட்டால், நான் ஒருகாலத்தில் தங்களுக்கு உதவிசெய்வேன்; இந்த ஏழையின்பேரில் கிருபைசெய்து உயிர்ப்பிச்சை கொடுக்கவேண்டுமென்று கேட்டது. அதற்குச்சிங்கம் "அற்பபிராணியாகிய நீயா! எனக்கு உதவி செய்யப்போகிறாய் இனி இங்கே வராதே, மன்னித்துவிட்டேன் ஓடிப்போ" என்றது. சுண்டெலி "செத்தேன், பிழைத்தேன்" என்று சொல்லிக்கொண்டு தன்னிடம் போய்ச்சேர்ந்தது. கொஞ்சநாளைக்குப்பிறகு சிங்கம் வேடன்கட்டிய வலையில் அகப்பட தப்பித்துக்கொள்ளமுடியாமல் கர்ஜித்தது. அந்தச் சத்தத்தைக்கேட்ட சுண்டெலி வந்து வலையைக்கடித்தெறிந்து சிங்கத்தை விடுவித்தது. அப்பொழுது சிங்கம் சுண்டெலியைக் கொண்டாடி முன் அதை விடுவித்ததின் பயனைத்தெரிந்துகொண்டது. ஆகையால் சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்.

பாட்டு.

இராகம்-முகாரி தாளம்-ரூபகம்-மெட்டு-தில்லாந்திரி;

1. காடுதனில் அலைந்ததினால் களைத்துப்போனசிங்கம்,
பாடுபட்டு இரைதின்றதால் படுத்துறங்கினது;
2. எங்கெங்கும் ஓடிச்சென்ற எளியசுண்டெலிகள்,
தங்குதடை இல்லாமலே தாவிசிங்கத்தின்மேல்;

3, குதித்துக்கொண்டுசெல்லும்போது குறிப்பாய் ஒன்
[றைப்பிடித்து,
மிதித்துக்கொல்லுகிறேனென்றுமிரட்டி ஆதைவிழிக்க;

4. பயத்துடனே சுண்டெலியும் பரிவுடனேபார்த்து,
தயவுடனேஎன்னைவிட்டால் தருமுதவிசெய்வேன்;

5. என்றுசொன்னசுண்டெலியை எறிட்டதுநோக்கி,
நன்றாய்நீயும்நவின்றாயென்று நலமுடனேநகைத்து;

6. அற்பஜெந்து உபகாரத்தை அசட்டையாகநினைத்து
மற்றுமுள்ளமதிகள்சொல்லி மன்னிப்புடன்விடவே;

7. ஆடம்பரத்துடன் அங்கே அநேகநாள்சென்று,
வேடன்வைத்த வலையில் தலை விதியாலகப்பட்டு;

8. அதிவேகமாய் இழுத்துப்பார்த்தும் ஆகாததினாலே,
கதியில்லாமல் கர்ஜித்தது கடகடென்றுபுரண்டு;

9. அந்தச்சத்தம்கேட்டெலியும் அதிவேகமாய்ச்சென்று,
விந்தையுடன் சந்தோஷமாய் விடுவித்ததுசுகமாய்;

10. உருவந்தனில் சிறியோர்களை உதவாரெனலாகா,
சிறுதுரும்பும்நமக்கெப்போதும் சிறந்தவேலைச்

ட்ராயிங்.

சிங்கத்தின்—தலை, கால், உருவமுழுவதும்;
சுண்டெலி, வலை, மரங்கள்;

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:—சுண்டெலி, சிங்கம்;
கயிற்றினால்:—வலைசெய்தல்.

எலியும் எலிக்குஞ்சுகளும் 15.

கதை.

ஒரு வளையில் ஓர் எலி நான்கு குஞ்சுகளுடனே வசித்துக்கொண்டிருந்தது. அது வெளியே போகும்பொழுது தன்குஞ்சுகளைப்பார்த்து "நீங்கள் வெளியே போகாதீர்கள்; போனீர்களானால் பொறியில் அகப்படுவீர்கள், உங்களுக்காகத்தான் அங்கே பொறிவைத்திருக்கிறார்கள்; நான் உங்களுக்கு ஆகாரம் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிப்போயிற்று. உடனே குஞ்சுகளெல்லாம் ஒன்றாய்க்கூடி வெளியே போவதற்கு உத்தேசித்து அதனதன் இஷ்டப்படி வெளியே சென்றன. அவ்விதம் வெளியே போன குஞ்சுகளில் மூன்று கொஞ்சநேரத்திற்குள் வளைக்குத்திரும்பிவந்துவிட்டன. ஒரு குஞ்சுமட்டும் வீதிநெடுகப்போய்ப்பார்க்கையில், அங்கே ஓரிடத்தில் பணிகாரம்

இருப்பதாகத்தெரிந்துகொண்டது. அதை ஆவலுடனே போய் வாயினாற் கௌவவும் யந்திரம் காலை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டது. தன்னாற் கூடியமட்டும் வெளியே வரப்பார்த்தும் முடியாததனால், காலை வெகு வேகமாய் இழுக்கவே தன் கால் அறுந்துபோயிற்று. அங்கிருந்து நொண்டிக்கொண்டு மெள்ள மெள்ள வளைக்குவந்து சேர்ந்தது. வளையிலிருந்த குஞ்சுகள் ஏன் இவ்விதமானதென்று கேட்க, நடந்தவிஷயத்தைச்சொல்லிற்று. உடனே மற்றக்குஞ்சுகள் இதைப்பார்த்து "நீபயப்படவேண்டாம் தாய்வந்துகேட்டால் பொறி இவ்விடம் வந்து கடித்து விட்டு ஓடிப்போய்விட்டதென்று சொல்லுவோம்" என்று கூறின. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தாயெலி வந்து கேட்டதும் மற்றக்குஞ்சுகள் பொறி இவ்விடம் பாய்ந்து வந்து 'இந்தக்குஞ்சைகடித்துவிட்டு ஓடிப்போய்விட்டது" என்று பதில் சொல்லின அப்படியா! "பொறிக்குக்காலும் கையுமிருக்கிறதா? பொய்யா சொல்லுகிறீர்கள்" என்று நன்றாய் அவைகளுக்கு புத்திவரும்படி கடித்தது. ஆகையால் தாய்வாய்பேச்சைக்கேளாவிட்டால் நாய் வாய்ச்சீலையாவார்கள்.

பாட்டு.

இராகம்-இந்துஸ்தானிபியாக்-தாளம்-ஆதி.
மெட்டு-சலோ சலோகர.

1. நன்றாய்வசித்ததுதாயெலியுடனே நான்குகுஞ்சுகள்
[ஓர் வளையில்,
அன்பாய்வெளியேசெல்லும்போது அருமைக்குஞ்சு
[களைப்பார்த்து;

2 ஒருமித்து இருங்கள் ஒழுங்காக ஓரிடத்திலும் செல்லா
[மல்;
தெருக்களிலெங்கும் திரிந்தீரானால் திசைதப்பிவிழுவீர்
பொறிதனிலே;

3. என்றுசொல்லிப்போனவுடன் எலிக்ஞும் தனித்தனி
யேசெல்ல,
நன்றாய் அவ்விடம்பணிகாரத்தை நலமுடன்கண்டது
[பொறியொன்றில்;

4 பணிகாரம்ஒன்றைக்கண்டதினால் பதுங்கி இழுத்தது
[பாபரப்பாய்,
இனிப்பாய்த்தின்றதும் எலியின்கால் எடுக்கமுடியா
[மல் அகப்பட்டது;

5. படபடப்புடனே எலியுமப்போபலமாயிழுத்ததும்கால்
[அறுந்து,
நடக்கமுடியாமல் நொண்டிக்கொண்டு நகர்ந்துசென்
[றது தன்வளைக்கே;

6. சென்றதும்குஞ்சுகள் காலறுந்தசிறியஎலியைத்தாம்
[பார்த்து,
இன்றைக்குஉன்கால்தனை அறுத்தார் யாரெனக்கேட்க
[சிறுகுஞ்சும்;

7. நடந்ததைக்கூறமற்றவையும் நலமாய்ப்பார்த்து நவின்
[றதொன்று,
கிடந்தபொறியும்கிட்டவந்து கிளறுங்காலைக்கடித்த
[தென்போம்;

8. தாயெலிவந்துகேட்டவுடன் தயவுடன்சொன்னது [தவறுகளை,
பாய்ப்பட்டபொறியொன்று பக்குவமாகவந்ததிங்கே;

9. வந்தவுடனேபொறியுமப்போ வகையுடன்கடித்ததும் [சென்றதது,
என்று சொல்லி ஏமாற்றி எலிகளும் விரைந்துசெல்லுகையில்;

10 தாயெலி குஞ்சுகளைப்பிடித்து-தகுந்தபடியே தண்டித்தது;
தாய்வாய் பேச்சைக்கேளாதார் நாய்வாய்ச்சிலையாவாரே;

ட்ராயிங்.

எலி, குஞ்சுகள், எலிப்பொறி, வீடு;

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:-எலி;
பட்டாணியால்:-கூண்டு, வீடு;

நரியும் ஆடும். 16.

கதை.

ஒரு காட்டில் ஒரு நரி இருந்தது. அதற்கு அதிக் தாகமாக இருந்தது. அது காடெல்லாம் தேடிப்பார்த்தும் தண்ணீர் அகப்படாததினால் கடைசியாக ஒருதோட்டத்தில் பெரியகிணறு ஒன்றைக்கண்டது. அதைப்போய் ஜலமிருக்கிறதா என்று எட்டிப்பார்க்கவும், ஒருகட்டி தடுக்கிவிடவே, கிணற்றுக்குள் விழுந்தது. அங்கே தாகமடங்கும் வரையில் தண்ணீரைக்குடித்துவிட்டு, வெளியேவர தன்னால் கூடியமட்டும் கிளம்பிக் குதித்துக்குதித்துப் பார்த்தும், மேலேவர முடியவில்லை. அப்பொழுது அக்கிணற்றின் பக்கமாய் ஒரு ஆடு சத்தஞ்செய்யவும், அதை வெகு இன்பமுடன் கூப்பிட்டது. அப்பொழுது ஆடு சமீப

த்தில் வரவும் அதைநோக்கி "ஏ அழகான ஆடே இவ்விடத்தில் அதிக இனிமையான தண்ணீர் இருக்கிறது அதை நீதான் ருசிபார்க்கவேண்டும்; இன்னொருவர் குடித்தால் இதன் ருசியைத் தெரிந்துகொள்ளமாட்டார்கள்; நான் விடாமல் குடித்துக்கொண்டுதானிருக்கிறேன்" என்றது. உடனே ஆடு அதை உண்மையென்று எண்ணி உள்ளேகுதிக்கவும், நரி ஆட்டின் தலைமேல் காலைவைத்து வெளியே போய்விட்டது. ஆடு கிணற்றுக்குள் வெகுகாலமிருந்து பிறகு இறந்து போய்விட்டது. ஆகையால் துஷ்டர்களுடைய வார்த்தையை நாம் நம்பக்கூடாது.

பாட்டு.

இராகம்-சங்கராபரணம்நோட்டு-தாளம் ஆதி.

மெட்டு-அத்திமுகவனே.

1. நரியும்தாகத்தால் நான்குபக்கம் திரிந்து,
பெரியகிணற்றை பிரியமுடன் பார்த்தது;
2. கண்டதோர்கிணற்றில் கடைசியாகஜலத்தை,
சந்தோஷத்துடனே ஜல்தியில்குடித்திட;
3. எட்டிப்பார்த்தவுடன் இறங்கிடவேஎண்ணிற்று,
கட்டிஒன்றுதட்டிட கடகடென்று விழுந்தது;
4. உள்ளேபோய் தண்ணீரை ஓயாமல் குடித்தபின்,
மெள்ளமெள்ளத்தாவிற்று-மேலேபோய்ச்சென்றிட;
5. தன்னால்ஆனமட்டும் தாவித்தாவிப்பார்த்ததும்,
என்னாலாகாதென்று ஏமாறியுட்கார்ந்தது;

6 அவ்வழியேசென்றஓர் ஆடுசத்தம்செய்திட,
செவ்வனேஆடதை சீக்கிரத்தில்கூப்பிட;

7 அறிவிலாத்தன்மையால் ஆடுகிட்டவரவே,
சரியானருசியுடன் ஜலமிருக்கிறதென்றது;

8. சாதுவானபிராணியும் சந்தோஷமாய்க்குதிக்கவே,
பாதத்தைதலையினில் பாங்குடனே வைத்தது;

9. அங்கிருந்துகிணற்றுமேல் அன்புடனேபாய்ந்ததும்,
தங்காமல்காட்டிற்குள் தைரியமாகச்சென்றது;

10. தீயவர்கள்தீங்குசெய்ய தித்திப்பாகப்பேசுவார்,
மாயமாய்ச்சொல்வதை மனதில்கொள்ளக்கூடாது.

ட்ராயிங்.

நரி, ஆடு, கிணறு, மரம்;

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:—நரி, ஆடு, கிணறு;

Part. V.

ஐந்தாவது பாகம்.

நான்காவது வகுப்பு.



குரங்கும் கிளியும். 17.

கதை.

ஒரு காட்டில் ஒரு குரங்கு இருந்தது. அதுஒரு நாள் மழையில் நனைந்து குளிர்பொறுக்கமுடியாமல் ஒரு மரத்தடியில் வந்து தங்கிற்று. அப்பொழுது அந்த மர

த்தில் கூடுகட்டிக்கொண்டிருந்த ஒரு பச்சைக்கிளி இந்த க்குரங்கைப்பார்த்து "ஏ குரங்காரே! உமக்கு கையுங்காலும் கடவுள் கொடுத்திருக்க நீரேன் ஒருவீட்டை கட்டிக்கொண்டு சுகமாயிருக்கக்கூடாது; எங்களுக்கோ கையில்லை, அப்படியிருந்தும் ஒருகூட்டை கட்டிக்கொண்டு இந்த மழையில் சுகமாயிருக்கிறோமே, நீரும் ஏன் அவ்விதமாக இருக்கக்கூடாது" என்று மனமிரங்கிச் சொல்லிற்று. இதைக்கேட்ட குரங்கு அதிககோபங்கொண்டு கிளியை ப்பார்த்து "நீயா எனக்குப்புத்திசொல்லுகிறவன், என்னுடைய சாமர்த்தியம் உனக்குத்தெரியாதுபோல் தோன்றுகிறது; நல்லது உன்னைவிட்டேனா பார்" என்று சொல்லி விட்டுப்போயிற்று. கொஞ்சநேரத்துக்கெல்லாம் கிளி ஆகாரந்தேட வெளியேபோக, அந்த ஸமயத்தில் குரங்கு வந்து, மரத்திலிருந்த கூட்டிற்குள் கையைவிட்டுமுட்டைகளையும் உடைத்தெறிந்து குஞ்சுகளையும் கொன்றுவிட்டு கூட்டையும் பிரித்தெறிந்துவிட்டது. அப்பொழுது கிளி வந்துபார்த்து அதிகதுக்கத்துடன் அலறிஅழுதது. ஆகையால் துஷ்டருக்கு நல்லபுத்திசொன்னால் அவர்கள் கெடுதலையே செய்வார்கள். நமக்கு கெடுதல் நேரிட்டாலும் பிறருக்கு நன்மையே செய்யவேண்டும்.

பாட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி-மெட்டு-முத்துவீராயிபாட்டு.

1. குரங்கும் மழையால் நனைந்ததினாலது,
குளிரால் மிகவும் வருத்தப்பட்டு,

மரத்தினடியினில் உட்கார்ந்துகொண்டு,
மல்லாந்துபார்த்தது ஓர்கிளையை;

2. பச்சைக்கிளியொன்று மரத்தின்கிளையினில்,
பக்குவமாய்க் கூட்டிலுட்கார்ந்து,
இச்சையுடன் மனமிரங்கிக் குரங்கிடம்,
எடுத்துச்சொல்லிற்றது நியாயமொன்றை;

3. திக்குத்தெரியாமல் திரிகின்ற கவிபாரே,
தேசமெல்லாம் எங்கும் அலைகின்றீரே,
பக்குவமாகவோர் வீட்டைக்கட்டிக்கொண்டு,
பாங்குடனிருக்கலாம் பண்புடனே;

4 இப்படியாகவோர் பச்சைக்கிளி சொல்ல,
ஏறிட்டுப்பார்த்து எரிச்சலோடு,
தப்பித்தொருக்காலும் போகமாட்டாயென்று,
சபதம் செய்துகொண்டு போயிற்றது;

5. அங்கிருந்தகிளி குஞ்சுகளுக்காக,
ஆகாரந்தேட வெளிப்பட்டதும்,
தங்கியிருந்த குரங்குமங்கே வந்து,
தன்கையால் கூட்டைப்பிரித்தெறிந்து;

6. குஞ்சுகளைக்கொன்று முட்டையை உடைத்து
கோபமுடன் வெளிச்சென்றதது,
நெஞ்சந்துடிக்கவே வந்துபார்த்து கிளி,
நேர்ந்ததை எண்ணிப்புலம்பினது;

7. துஷ்டர்களுக்கு நாம் நன்மையைச்செய்தால்,
துடுக்காய பகாரம் செய்வார்கள்,

நஷ்டம் நேரிட்டாலும் நற்புத்திதனையே,
நாமெப்போதும் சொல்வோம் நண்பர்களே;

8. இஷ்டமாய் இக்கதைதனைப்படித்தவர்,
என்னாளும்நன்மைதனைச்செய்ய,
கஷ்டப்படாமலே கடவுளருள் தனை,
கருத்திலிருத்துவோம் கண்ணியமாய்.

ட்ராயிங்

குரங்கு, கிளி;
மரம், மழைபெய்வதுபோல் காட்டல்;
கிளிக்குஞ்சுகள்;

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:—குரங்கு, கிளி, குஞ்சுகள்; முட்டைகள்;
பட்டாணியால்:—கிளிக்கூடு;

பூனைகளும் குரங்கும்.

கதை.

ஓர் ஊரில் இரண்டு பூனைகளிருந்தன. அவைகள் ஒரு நாள் ஒரு வீட்டில் நுழைந்து பானையில் அப்பம் இருக்கக்கண்டு, அதைக்கௌவிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் வெளியே வந்தன வரும் வழியில் ஒருபூனை இன்னொன்றை தனக்குசரிபாதி கொடுக்கும்படிகேட்டது; உடனே அது அப்பத்தை பாதியாகச்செய்து அதனிடத்தில் ஒரு துண்டைக்கொடுத்தது. அப்பொழுது அது தனக்கு கொஞ்சமாயிருப்பதாக எண்ணி "இது எனக்குவேண்டாம் இது கொஞ்சமாகவிருக்கிறது; வேறு யாரிடத்திலாவது கொடுத்து இதைப்பங்கிட்டுக்கொள்வோம் " என்று

சொல்லிற்று. மற்றதும் அப்படியேசெய்வோம்என்று ஒத்துக்கொள்ள, அப்பொழுது அவ்வழியே ஒரு குரங்குவருவதைக்கண்டு "ஏ குரங்கே! நீ இந்த அப்பத்தை எங்களுக்குப்பிரித்துக்கொடுக்கிறாயா"? என்று கேட்டன, குரங்கும் பிரித்துக்கொடுக்கிறேன் என்று ஒத்துக்கொண்டு, ஒரே ஒட்டமாய் ஓடிக்கடையிலிருந்து ஒரு திராசைத்தூக்கிக்கொண்டு வந்தது உடனே அது ஒவ்வொரு துண்டையும் ஒவ்வோர் தட்டில் போடவே பெரியதுண்டு இருந்ததட்டு கீழே தாழ, அப்பொழுது குரங்கு அதிலிருந்த அப்பத்தை பாதிக்குமேல் தின்றுவிட்டு மீதியை தட்டில் போட்டு நிறுத்தது. முன் குரங்கினால் தின்னப்படாத அப்பத்தட்டு தாழவும் இத்தட்டு மேலேஎழ, பெரியதுண்டைஎடுத்து அதிற்பாதிக்குமேல் தின்றுவிட்டு மீதியைப் போட்டு நிறுத்தது. இப்படிக் கொஞ்சங்கொஞ்சமாய் முக்கால்வாசி, அப்பத்தைத்தின்றுவிடவே இதைக்கண்ட பூனைகள் பாக்கியிருக்கப்பட்ட துண்டுகளையாவது கொடுக்கும்படி வேண்டிக்கொண்டன. அப்பொழுது குரங்கு அதையும் தான்பட்ட சிரமத்திற்குக் கூலியென்று வாயிற்போட்டுத்தின்றுவிட்டது. அப்பொழுது பூனைகள் ஏமாந்தன. ஆகையால் உள்ளதேபோதுமென்று திருப்தியடையவேண்டும்.

பாட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்,
மெட்டு-மற்றுப்பற்றெனக்; தேவாரம்.

1. பூனை இரண்டொன்றாகக்கூடி புகுந்தது ஓர்வீட்டினில்,
பானையிலுள்ள அப்பத்தைக்கண்டு பற்றிக்கொண்ட
[வைசென்றன;

2. துண்டிரண்டாகச்செய்துகொண்டதை தூக்கிப்பார்
[த்து எடுக்கவே,
கண்டுகொண்டது தாரதம்யத்தை தனத்தினாலே அவை
[களும்;

3. அந்தவழியேவந்தகுரங்கை அவைகளும் மிகவேண்
[டியே,
சொந்தமாயுள்ள தங்கள் அப்பத்தை ஸொகுஸாய்ப்
[பிரிக்கவேண்டின;

4. திடுதிடென்றொருகடையிலோடியே கொண்டுவந்தது
[திராசொன்றை
திடுக்கிடும்படி துண்டிரண்டையும் திராசில் போட்டு
நிறுத்தது;

5. ஒன்றுக்கொன்று பெரிதாயிருக்க-ஒன்றில் பாதியைத்
தின்றது;
சென்றது தட்டு குறைவுகண்டதே-சீக்கிரத்தில் உயா
மாய்,

6. ஈன்ற அப்பத்தை கொஞ்சங்கொஞ்சமாய்-எடுத்துத்
தின்றதும் பூனைகள்;

மீந்த துண்டுகளைக்கொடுச்சவே-மிரவாய் அவைகள்
வேண்டினை;

7. எடுத்துக்கொண்ட சிரமத்திற்காகவே-எந்தனுக்கில்லை
என்றது,
கடுகடுப்புடன் மீதியைத்தின்று-காட்டின் வழியே
சென்றது;

8. உள்ளதேபோது மென்றமைந்திடும்-உயர்மனமோருக்
ளஞ்சியம்,
கள்ளமனதை உள்ளவரிடம் கனவிலும் ஸ்நேகம்செய்
யாதே.

ட்ராயிங்

குரங்கு, பூனை, அப்பம், திராசு, பானை;

கிண்டர்கார்ட்டன்,

களிமண்ணால்--குரங்கு, பூனை, அப்பம், பானை;
அட்டையினால்:-திராசு; வீடு,



வேடன்-புரு-ராஜாளி-19

கதை.

ஒரு காட்டில் வேடனொருவன் இருந்தான். அவன் அநேகமாய் பக்ஷிகளையும், மிருகங்களையும் கொன்றுதின்பதுதான் வழக்கம், இப்படியிருக்க. ஒரு தினத்தில் காடுமுழுவதும் அலைந்துபார்த்தும் வெகு நேரம் வரையில் ஒரு ஜெந்துவும் அகப்படவில்லை. கடைசியில் ஒருமரத்தில் ஒரு புரு இருக்கக்கண்டு அதிக சந்தோஷத்துடன் அதை அம்பினால் அடிக்கக்குறிபார்த்துக்கொண்டிருந்தான் அதே சமயத்தில் ஒரு ராஜாளி எங்கும் அலைந்துபார்த்தும்

தனக்கு ஆகாரம் கிடைக்காமலிருப்பதைக்கண்டு விசனமுற்று, பசியினால் தத்தளித்துக் கொண்டிருக்கையில் அதே மரத்திலிருந்த புறாவைக்கண்டது உடனே சந்தோஷமடைந்து அதை அடித்துக்கொண்டுபோக குறிபார்த்து வட்டமிட்டுக்கொண்டிருந்தது அப்பொழுது புறா கீழ்போக முடியாமலும் மேலே போக முடியாமலும், வேடனும் ராஜாளியும் தன்னைக்கொன்றுவிட யத்தனித்துக்கொண்டிருப்பதைக்கண்டு "ஏ கடவுளே நீ தான் என்னைக்காப்பாற்றவேண்டும், வேறு ஒருவரும் எனக்குத் துணைகிடையாது, இந்த ஸமயத்தில் என்னைக்கைவிடக்கூடாது" என்று முறையிட்டது உடனே புற்றிலிருந்து ஒரு ஸர்ப்பம் வெளியே வந்து வேடன் காலைக்கடித்துவிட்டது. அப்பொழுதுவேடன் ஐயோ,ஐயோ,என்று கதறி அப்பால்விழவும், அவன்கையிலிருந்த அம்புவிடுபட்டுமேலே பறந்துகொண்டிருந்த ராஜாளியின் மேல் படவே அது தலை கீழாய் சுற்றிக்கொண்டு கீழே விழுந்து இறந்தது அப்பொழுது புறா தன்னைக்கொல்லவந்த வேடனும், ராஜாளியும் கீழே விழுந்து இறந்து கிடப்பதைப்பார்த்து கடவுளை தியானம் செய்துகொண்டு சந்தோஷத்துடன் பறந்துபோய் விட்டது. ஆகையால் கடவுளை நம்பினோர் கைவிடப்படார். நாம்பிறருக்குத்தீங்கு நினைத்தால் நமக்கே அந்தத்தீங்கு நேரிடும்.

பாட்டு.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஆதி;மெட்டு-ரவகிமேர்சிகியா ஜானே

---

1 வனத்திலிருந்தான் ஒரு வேடன் வந்து மிருகங்களைக் கொன்றுதின்று,
தனமில்லாமல் ஏழ்மையினால் தந்திரமாக வசித்துவந்தான்;

2. இப்படி இருந்தும் ஒருநாளில்-எத்தனை உபாயங்கள் செய்தும்,
செப்படிவித்தை செய்ததுபோல்-செய்த பயன்கள் யாதொன்றும்;

3. ஆகாரத்திற்காகாமல்-அலைந்து பார்த்தும் காணாமல்,
சோகத்தினால் காடெங்கும்-சுற்றிப்பார்த்தான் சோர்ந்தவனும்;

4. கண்டான் புறாவைக்கடைசியிலே-களித்தான் மரத்தைப்பார்க்கையிலே,
கொண்டான் வில்லைக்கைதனிலே-குறிப்பாய்ப் பார்த்தான் மரத்தினிலே;

5. இவ்விதமாகவோர் ராஜாளி-எங்கும் அலைந்ததும் வேசாரி,
எவ்விதமாகவோ இதைக்கண்டு-எடுத்துச்செல்லவவாக்கொண்டு;

6. சுற்றிச்சுற்றித்திரிந்த தங்கே-சுறுசுறுப்பாயதை யடித்துத்தின்ன,
புற்றிலிருந்த பாம்பொன்று-புஸ்ஸெனக்கிளம்பி சடக்கென்று;

7. துஷ்டனான வேடனிடம்-துரிதமாய் வந்தது கொன்றுவிட
கஷ்டகாலம் வந்ததனால்-கடித்து விட்டுச்சென்றதது;

8. ஐயோ ஐயோ வென்றுசொல்லி-அலறி விழவும்
தரைமேலே.
தெய்வச்செயலால் இவன் வாழ்வும்-திருப்தியடையா
தொழிந்ததே;

9 விழுந்தவன் அப்பு விடுபட்டு விசையுடன் பட்டதும்
ராஜாளி,
தடதடத்தகுரலுடனே-தலை கீழாய் விழுந்தது தலை
தெறிக்க;

10. அழகாய் புறாவும் ஆநந்தமாய்-அன்புடன் கடவுளை தி
யானித்து,
பழமது பாலில் விழுந்ததுபோல்-பண்பாய்க்கடவுளை
ப்பாடிற்று;

11. நாமொருவர்க்கு நன்மைசெய்தால்-நமக்கொருவர் நன்
மை செய்வார்,
தீமையை யார்க்கும் செய்தாக்கால் தீங்கேயிழைப்பர்
தாநமக்கு;

12 கடவுளை நம்பின யாவர்களும் கைவிடபடாரே என்
றென்றும்,
திடமாய் நன்மைதாமடைந்து திருப்தியாயிருப்பார்
எந்நாளும்,

ட்ராயில்.

புறா, ராஜாளி, வேடன், மரம் (பலவிதஉருவம்)

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:—புலி, ராஜாளி, அம்போடுகூடியவேடன்;
அட்டையினால்:—பாம்பு;
குச்சியினால்:—அம்பு

வேடனும் புலியும் கரடியும். 20.

கதை.

ஒரு காட்டில் ஒரு வேடன் வசித்துக்கொண்டிருந்தான். அவன் தினந்தினம் காட்டிற்குப்போய் அகப்பட்டமிருகங்களைக்கொன்று ஜீவனம் செய்துவந்தான். இப்படியிருக்கையில் ஒரு நாள் வழக்கம்போல் காட்டிற்குள் போகையில், ஒருபுலிதன் எதிரேவரக்கண்டு சந்தோஷமடைந்து, அதைத்தன் அம்பால் அடித்தான். அந்த அடி அதன்மேல் படாமல்போகவே வேடனை புலி விரட்ட ஆரம்பித்தது. அப்பொழுது வேடன் ஓடோடியும் வந்து ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான் மரத்தின்மேலேபோய் அவன் நிமிர்ந்து பார்க்கையில் அங்கே தனக்கு முன்னால் ஒரு கரடி அதே மரத்திலிருப்பதைப்பார்த்து "ஏகடவுளே! புலிக்குப்பயந்து இந்த மரத்தின்மேல் ஏறினேன் இங்கேயும் என்னைக் கொல்லக்கூடிய ஒரு கரடியிருக்கிறது எனக்கு வேறுகதியில்லை; நீதான் காப்பாற்றவேண்டும்" என்று தியானித்தான், பிறகு கரடியைப்பார்த்து "எனக்குவேறுகதியில்லாததால் நீ தான் என்னைக்காப்பாற்றவேண்டும்" என்று அதை வேண்டிக்கொண்டான், அப்பொழுது கரடிவேடனைப்பார்த்து "பயப்படாதே நான் காப்பாற்றுகிறேன்" என்று சொல்லவே, வேடன்சற்றுபயந்தெளிந்தான். பிறகு கொஞ்சநேரமானதும் வேடனுக்குக்களைப்பினால் தூக்கம் வரவே தான் உட்கார்ந்திருந்த கிளையில் சற்று படுத்துக் கொண்டான். அவன் தூங்கும்பொழுது கரடி அவனை ஜாக்கிறதையாய்க் கீழேவிழாமல் பார்த்துக்கொண்டிருந்தது. அப்பொழுது மரத்தின்கிழிருந்த புலி, கரடியைப்

பார்த்து "இவன் மகா கொடியவன், உன்னையும் என்னையும் எங்கே கண்டாலும் கொல்லும் ஸ்வபாவமுடையவன் இவனுடைய ஸ்நேகம் நமக்கு சனவிலும் உதவாது; ஆதலால் இவனைக்கீழே தள்ளிவிடு, நான் அவனைத்தின்று விட்டு ஓடிப்போய் விடுகிறேன்" என்றது. அதற்குக்கரடி "இவன் எவ்வளவு துஷ்டனாயிருந்தாலும் சரி காப்பாற்றுகிறேன் என்று சொன்னபிறகு அதற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யமாட்டேன்" என்று மறுமொழி சொல்லிற்று. கொஞ்சநேரம் தூங்கினபிறகு வேடன் விழித்துக்கொண்டான். அப்பொழுது கரடி வேடனைப்பார்த்து "எனக்கும் இப்பொழுது தூக்கம் வருகிறது ஆகையால்; கொஞ்சநேரம் நானும் படுத்துக்கொள்ளுகிறேன் அது வரையில் என்னைக்கீழே விழாமல் பார்த்துக்கொள் என்று வேடனை வேண்டிக்கொள்ளவே, அதற்கு வேடனும் சம்மதித்தான், உடனே கரடிபடுத்து நித்திரைபோயிற்று. அப்பொழுது புலி வேடனைப்பார்த்து "ஏ வேடனே! இந்தக்கரடியைக்கீழே தள்ளினால் அதைத்தின்றுவிட்டு உன்னை விட்டுவிடுகிறேன்; என்னைப்போல் அதுவும் ஒரு துஷ்டப்பிராணிதான்; நான் போனபிறகு அது உன்னைத்தின்றுவிடுவதாக எண்ணிக்கொண்டிருக்கிறது; ஆகையால் நீ உயிரோடு இருக்கவேண்டுமானால் அதைக்கீழே தள்ளு" என்றது, வேடன் புலி சொல்வதும் நியாயமாயிருக்கிறதென்று நினைத்துக்கரடியைக்கீழே தள்ளிவிட்டான். கரடி எப்போதும் கிளையைப்பிடித்துக்கொள்ளும் ஸ்வபாவமுடையதால், அவன் தள்ளவும் மறுபடியும் மரத்தின்மேல் ஏறிவந்து விட்டது. அப்பொழுது வேடன் தான் செய்தகாரியம் பிசகென்று நினைத்து

நடுங்கினான். அப்பொழுது கரடி வேடனைப்பார்த்து "நான் எவ்வளவு காப்பாற்றுகிறேன் என்று சொல்லியும், உனக்கு நம்பிக்கைஇல்லை பார்த்தாயா! இப்புலியின் பேச்சைக்கேட்டு என்னை த்தள்ளினாய்; ஆனாலும் பாதகமில்லை, நான் சொன்னவார்த்தை தவிறேன் பயப்படாதே என்று சொல்லி அவனை வீட்டிற்குக்கொண்டுபோய் விட்டுவந்தது. ஆகையால் நமக்கு ஒருவர் அபகாரம் செய்தாலும் நாம் அவர்களுக்கு உபகாரமே செய்யவேண்டும். நாம் ஒருநாளும் நம்பிக்கைத்துரோகம் செய்யக்கூடாது.

பாட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-சாபு-மெட்டு-சிங்காரத் தோட்டத்தை; ஆனந்தக்களிப்பு.

1. ஒரு காட்டில் ஓர் வேடனிருந்தான்-அவன்.
அரியவில்லைக்கொண்டு அடிப்பான் ஜெந்துவை;

2 அமரிக்கையாக மிருகத்தை—தேவ,
அமிருதம்போலே எண்ணி ஆகாரம் செய்வான்;

3. புலியை ஓர்தினத்தினில் கண்டான்-பெரும்,
ஒலிசெய்யு முன்னமே ஓங்கியே அடித்தான்;

4, அடித்த அடிக்கதுதப்பி-புலியும்,
கடிக்கவே எண்ணிக்கபடமாய் விரட்ட;

5. ஓடி ஏறினான் மரத்தில்-அங்கே,
கடிக்கக்கூடிய பெருங் கரடி இருக்க;

6. பார்த்ததும் பயத்தால் திகைத்தான்-அங்கம்,

வேர்த்துவிட விழுந்தானதன் காலில்;

7. சரணடைந்த வேடனை-கரடி,
மரணமில்லாமலே மரியாதையுடனே;

8. காக்கிறேன் என்றது சொல்ல-மன,
பூர்த்தியுடன் உள்ளம் பூரித்துமெல்ல;

9. சற்றேபடுத்தான் கிளையில்-புலியும்,
வெற்றுளைத்தள்ளென்று வேண்டிக்கொள்ளவே;

10. ஒருநாளும் அவ்வாறு செய்யேன்-என்று,
மறுவாக்கு சொல்லியே மறுத்துறைத்தது;

11. வேடனுடனே விழிக்க-அப்போ,
காடாந்தகாரமாய் கரடி தூங்கிற்று;

12. வேடனை பார்த்தந்தப்புலியும்-வெகு,
ஜாடைகள் செய்து ஜல்தியில்தள்ள;

13. தள்ளினன் கரடியை வேடன்-கிளையை,
மெள்ளப்பிடித்தது மேலேறிவரவும்;

14. நடுங்கினன் கரடியைப்பார்த்து-அவனை,
விடுதிதனில் கொண்டு விட்டுவந்தது;

15, அபகாரம் செய்தாலும் உலகில்-பதில்,
உபகாரங்களையே உறுதியாய்ச்செய்வோம்;

16. நம்பிக்கை த்ரோகம்செய்யாதே-அது
நன்மையாக ஒரு நாளுமிராதே.

ட்ராயின்.

வில் அம்போடு கூடிய வேடன், புலி, கரடி, மரம், வீடு;
(வெவ்வேறுமாதிரிபோடவும்)

கிண்டர்கார்ட்டன்.

களிமண்ணால்:-புலி, கரடி, மனிதன், மரம்போல்செய்தல்;
குச்சியினால்:-அம்பு, வில்;
பட்டாணியால்:-வேடன்குடிசை;

வாசகம்.

புலி, கரடி இவைகளைப்பற்றிய பாடத்தை வாசிக்கச்செய்து விஷயங்களைத்தெரிந்து கொள்ளச்செய்தல்,

---

எழுதுதல்.

வாசகத்திலாவது, கதையிலாவது 7-வரிகளை நன்றாய்ப்பார்த்து எழுதச்செய்தல். சொல்வதெழுதல், காப்பி எழுதுதல் முதலியன.

கணிதம்.

தினம் ஒன்றுக்கு 15 மிருகங்கள் வீதம் 16 நாட்க

ளில் எவ்வளவு மிருகங்களைக்கொல்வான் ?

ஒருவருஷத்தில் கிடைக்கும் புலித்தோல்களின் வருமானம் ரூ 623528 அ 10 பை 8. அப்படியானல் 64929-வருஷங்களில் எவ்வளவு வருமானம் கிடைக்கும்?

பொருள்பாடம்.

புலி, கரடி இவைகளின் சம்பந்தங்களையும், பழக்க வழக்கங்களையும், ஆகாரத்தையும், உபயோகத்தையும் சொல்லச்செய்தல்.

பூகோளம்.

இந்தியாவில் எந்தஜில்லாவின் காடுகளில் புலி, கரடி, முதலான மிருகங்கள், அதிகமாயிருக்கின்றன?

இயற்கைப்பாடம்.

புலியின் உடல் எவ்விதம் அமைந்திருக்கிறது; அதன் ஒவ்வொருஎலும்பும் எவ்விதம் அமைக்கப்பட்டிருக்கிறது; புலியின் நகம் நீண்டும், பல் கூர்மையாயும் இருப்பதனல் உண்டாகும் பிரயோஜனங்கள்.

செய்யுள்.

வேங்கை வரிப்புலி நோய்தீர்த்த விட்டாரி (என்னும் பாட்டுபோன்றவை)

சரித்திரம்.

இராமாயணத்தில் இந்தக்கதையானது சீதையினால் அசோகவனத்தில் ஹனுமாருக்குச் சொல்லப்பட்டது. (இந்தச்சரித்திரத்தை சுருக்கமாகச்சொல்க)

சுகாதாரம்.

காட்டில் வசிக்கும் ஜனங்கள் மூலிகை சம்மந்தமான காற்றை உட்கொள்ளுவதால் நோயற்றிருக்கிறார்கள்.

Action Songs.

செய்கையுடன் பாட்டு,

இராகம்-இந்துஸ்தானிபியாக்-தாளம்-ஆதி-மெட்டு

சலோ சலோ.

1. அங்கே [ஓர்] ரயில்வண்டி அற்புதமாகவே, அழகான வேலையுடன் அதிவேகமாய்;

2. வந்ததும் தூரத்தில் வண்டி நின்றிடவே,
3. கைத்தனை இறக்கவும் கணத்தில் வந்திடவே,
4. அந்த்மாயாவரும் அதிலிருந்திறங்கி,
விந்தைகள் பேசியே வெளியே சென்றார்;
5. மணிதனை கிண்ணென்று மனிதனும் அடிக்க,
6. கொடிதனைக் காட்டியே கொடுக்கவும் டிக்கட்டை,
7. கொடுத்தான் டிரைவரும் கோவென்ற சப்தம்,
குப்குப் என்று ரயில்வண்டி செல்லவே;

செய்கையுடன் பாட்டு 2.

இராகம்-முகாரி--தாளம்-ரூபகம்--மெட்டு--தில்லாங்கிரி;

1. தேகந்தனை வியாதியின்றிசெய்யும் ஒருபாயம்,
வெகந்தனில் அவ்விதமாய் விருப்பமுடன்செய்வோம்;
2. சுத்தமான ஜலந்தனிலே ஸ்நானம் செய்யவேண்டும்;
சுத்தமாக ஆடைதனை துவைத்துடுக்கவேண்டும்;
3. அசுத்தமிலா தண்ணீரையே-அருந்தவேண்டும் தின
[மும்,
பசித்தவுடன் ஆகாரத்தை பண்பாயுண்ணவேண்டும்,
4. வீடுகளை எப்போதும் நாம்-வெள்ளைசெய்யவேண்டும்
வீட்டிலுள்ள அசுத்தங்களை-வெளியில் போடவேண்
டும்;
5. காலையிலும் மாலையிலும் காலாரவே நடப்போம்,
வேலைசெய்து இளைப்பாறவே-வெளிக்காற்றினில் இரு
ப்போம்.

கோலாட்டம் 1.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி-மெட்டு-பாட்டுகள் பலவிதமாய்.

1. பெண்கள் எல்லோரும் கூடி-பிரியமுடன்,
சிங்காரமாகப்பாடி,
கண்ணியமாகவே கோலாட்டந்தனையே,
கனஸொகுசாய்ப்போடுவோம்;

2, அன்புடன் கடவுள்தனை-நாம் வெகு,
சொந்தமுடன் ஸ்மரித்து,
விந்தைகள் பேசியே விநோதமாகவே,
வெகுவாய் விளையாடுவோம்;

3. வந்தனங்கள் செய்வோம் வணக்கமாய்,
சிந்தைதனில் நினைந்து;
அந்தரங்கத்துடன் ஆசையாய்க்கற்பிக்கும்,
ஆசிரியரெல்லோர்க்கும்;

4 கண்ணியமாயிருப்போம்-எந்நாளும்,
கர்வத்தை அடையாமல்,
திண்ணமாயடைவோம் தேக சௌக்கியந்தனை,
திருப்தியுடனிருக்க;

5. கலியுகம் தன்னிலே நாம்-எப்போதும்,
குலமுறை தவறாமல்,
நிலமைதனிலிருந்து நீதிகளை நாம்,
நெறியுடன் செய்திடுவோம்.

கோலாட்டம் 2.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஏகம் மெட்டு பஹார்மொ ரிபியாரி;

பல்லவி.

1. நாமெல்லோரும் போவோம் நன்றாய்க்கோலாட்டம் போட;

அநுபல்லவி.

2. தீமதம் செய்யாமல் தயவுடன் கூடி,
தைரியமாகப்போடுவோம் ஹ-ஹா (நாமெ)

3. சிறந்தகயிறுகளை செவ்வையாய்ப்பிடித்து,
திறமையுடன் ஆடுவோம் ஹ-ஹா-(நாமெ)

4. நாட்டுப்பெண்களைப்போல் நன்மையாய் நாமும்,
வீட்டுவேலை செய்தபின்-ஹ-ஹா (நாமெ)

5, பள்ளிக்கணக்குகளை பண்பாகச்செய்தபின்,
துள்ளிவிளையாடுவோம்-ஹ-ஹா (நாமெ)

6. நல்ல தண்ணீரினில் நலமுடன் குளித்து,
செல்வமாயுண்டபின்பு-ஹ-ஹா (நாமெ)

7. நல்லுடை யுடுத்தபின்-நற்பணிபூண்டு,
செல்வோம் சிறப்பாகவே-ஹ-ஹா (நாமெ)

8. வழிதனில்நாமும்-மரியாதையுடனே,
ஒழுங்காகவே செல்லுவோம்-ஹ-ஹா(நாமெ)

கும்மி 1.

இராகம் இந்துஸ்தானி-தாளம் ஆதி-மெட்டு-தமபின்மோரி

1 ஐந்தாவது ஜார்ஜ்துரை நம்மையாளும் ராஜா,
அன்புடைய மேரியம்மாள் நம்மையாளும் ராணி;

2, டில்லியிலே பட்டம்பெற்றார் நம்மையாளும் ராஜா,
எல்லையிலா புகழைப்பெற்றார் நம்மையாளும் ராணி;

3. தர்பார் எங்கும் விளங்கிவந்தார் நம்மையாளும் ராஜா
சர்வஜனம் போற்றவந்தாள்-நம்மையாளும் ராணி;

4 சீமை எங்கும் புகழைப்பெற்றார்-நம்மையாளும் ராஜா,
தீமையெல்லாம் விலக்கிவிட்டார் நம்மையாளும்ராணி;

5. செங்கோல்தனை செலுத்திவந்தார் நம்மையாளும் ராஜா,
மங்களமாய் விளங்கிவந்தாள்-நம்மையாளும் ராணி;

6 செல்வாக்குடன் இருந்துவந்தார் நம்மையாளும் ராஜா
எல்லாருக்கும் நன்மைசெய்தாள் நம்மையாளும்ராணி;

7. அகிலமெல்லாம் ஆண்டுவந்தார் நம்மையாளும் ராஜா
ஜெகமெங்கும் பார்த்துவந்தாள் நம்மையாளும் ராணி;

8. சூரியக்குடைபிடித்து வந்தார்-நம்மையாளும் ராஜா,
காரியமெல்லாம்பார்த்துவந்தாள் நம்மையாளும்ராணி

9. பெருமையாக வித்தைகற்றார்-நம்மையாளும் ராஜா,
திருமுகத்தால் அறிந்துவந்தாள்-நம்மையாளும்ராணி;

10. இந்த்ரனைப்போல்விளங்கிவந்தார்-நம்மையாளும்ராஜா
இந்த்ராணிபோல் விளங்கிவந்தாள் நம்மையாளும் ராணி

கும்மி. 2.

இராகம்-ஆநந்தபைரவி-தாளம்-ஆதி--மெட்டு-அங்குமிங்கும்திரிந்து;

1. நாமெல்லோரும் கும்மியடிப்போம்-நாகரீகமாக,
தீமையொன்றும் அணுகாமலே தீவிரமாய் ஏக;
2. சுந்ததமும் சிந்தைதனில் ஸரஸ்வதியை ஸ்மரித்து,
எந்தனுவில் வருவா யென்று எந்நாளும் நாம் துதித்து;
3, கந்தனுக்கு முன்பிறந்த கணபதியை வெகுவாய்,
சொந்த முடன் பணிவோம் நாமும் சுலபமாகத்தெ
ளிவாய்;
4. கார்த்திகையை தினமாய்க்கொண்ட கார்த்திகேயனை
நாமும்,
பூர்த்தியுடன் ஸ்மரிப்போம் மன பூர்த்தியுடன் தின
மும்;
5. நன்றாகவே நாமிருக்க நாமுறங்கும்போது,
அன்றாடம் கடவுள் தனை அழைப்போம் ஆதரவோடு;
6, பெரியோரைக்கண்டவுடன்-பிரியமாகவே இருப்போம்,
விரும்பிய பொருள்களையே- வேண்டும்போது கொடுப்
போம்;
7, தாகமென்றுகேட்டவர்க்கு-தண்ணீர்மிககொடுப்போம்
வேகமாக வந்தவர்க்கு-விரும்பி நிழலளிப்போம்;
8. ஐயந்தனை இட்டு நாமும்-அன்புடனே இருப்போம்,
வையந்தனில்யாவர்களும்-வாழ்த்தும்பேறை எடுப்போ
ம்.

Drama-நாடகம்.-1.

கிழவனும் அவன்மகனும்கழுதையும்.

முதல் அங்கம்.

கிழவன்:-அப்பா குழந்தாய்! நாம் இவ்விடத்தில் எத்தனை நாளைக்குத்தான் இந்த வறுமையினால் கஷ்டப்படலாம்; நம்மிடத்திலிருக்கப்பட்ட இந்த ஒரு கழுதையையும் சந்தையில் கொண்டுபோய் விற்றுவிட்டால் அந்தப்ப

ணத்தைக்கொண்டாவது கொஞ்ச நாளைக்கு திருப்தியாக ஜீவனம் செய்யலாம் என்று நினைக்கிறேன். உனக்கு என்ன தோன்றுகிறது மகனே?

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஏகம்-மெட்டு--ஐஸாகர்ணு
மகன்:- அப்பா உங்கள் இஷ்டப்படியே ஐயமில்லாமல் செய்வோமே,
தப்பாமலே கஷ்டிப்படுகிறோம் தகுந்த ஜீவனம் இல்லாமல்;
பட்டபாட்டை நினைத்தால் நாமும்-பலனை அடையோம் எந்நாளும்;
சட்டமாகவே திட்டப்படியே சடுதியில் செய்வோம் வருவீரே.

அப்பா! உங்கள் இஷ்டத்திற்கு மாறாக ஏதாவது சொல்வேனா?

அப்படியே செய் எனக்கும் சம்மதந்தான், சீக்கிரம்புறப்பட்டுப்போவோம் வாருங்கள்.

கிழவன்:- மகனே! சீக்கிரமாய்ப்போய் நமது கழுதையை ஓட்டிக்கொண்டுவா; ஜல்தியில் போவோம் சந்தைக்கு.

மகன்:- ஆம் அப்படியே ஓட்டிக்கொண்டு வருகிறேன். (என்று கழுதையை ஓட்டிக்கொண்டு வந்து) அப்பா! இதோகொண்டு வந்து விட்டேன், போவோம் வாருங்கள். (இருவரும் போகிறார்கள்.)

கிழவன்:- ஹை, ஹை (என்று ஓட்டிக்கொண்டுபோக வழியில் சிலர் சந்திக்க, அவர்களில் ஒருவன் கேட்கிறான்.)

அந்நியரில் ஒருவன்:- ஏ கிழவா! உனக்கு கொஞ்சமேனும் அறிவில்லையா? ஏன் இவ்விதமாக உனக்கு புத்திகெட்டுப்போயிற்று?

இராகம்:கமாசு தாளம்-ஆதி-மெட்டு-காணுங்குறத்தி;

1. புத்தி கெட்ட கிழவா-உந்தன் போதனையை நானறி வேன்,

சக்தியில்லா இப்பாலன் தட்டித்தட்டி விழுகிறானே; (புத்தி)

2. விந்தையான இச்செய்கை வியப்பைத்தருகின்றதே,

மந்தமானவனே உந்தன் மாய்கையெல்லாம் அறிவே ன்;(புத்தி)

ஏகிழவா தட்டித்தடுமாறி நடந்துவருகிற இந்தப் பையனை நடந்து வரவிட்டு, என் வீணாக இக்கழுதை யை ஓட்டிக்கொண்டுபோகிறாய்? உனக்கு புத்தியிருந்தால் நீ இவ்விதம் செய்வாயா? (என்றுசொல்ல)

கிழவன்:- ஏ அன்னியர்களே! நீங்கள் வருத்தப்படவே ண்டாம் நான் உங்களுக்கு வீணாக வருத்தத்தைக்கொ டுத்தேன், என்னை மன்னிக்கவேண்டும். இதோ உங்கள் இஷ்டப்படியே செய்கிறேன் (என்று தன்மகனைகழுதை யின்மேல் ஏற்றினன்)

அநநியர்:-ஏ கிழவா ரொம்பவும் சந்தோஷம்,போய் வருகிறோம் வந்தனம்.

கிழவன்:- வந்தனம்போய்வாருங்கள் (போகிறார்கள்)

இரண்டாவது அங்கம்.

கிழவன்:- ஏகுழந்தாய்! கழுதையை சீக்கிரமாக ஓட் டு,நாழியாகிறது ஜல்தியில்சந்தைக்குப் போகவாண்டாமா,

மகன்:- அப்பா! அப்படியே செய்கிறேன், ஹை? ஹை, (என்று ஓட்டுகிறான்.)

(வழியில் வந்த சிலர்களில் ஒருவன் சிறுவனைப்பார்த்து)

அந்நியரில் ஒருவன்:- ஏபையா! உன்மனதென்ன கல்

லா! ஈவு இரக்கமென்பது உன்னோடு பிறக்கவில்லையா?

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஏகம்-மெட்டு-தாஜ்ர்ராஜ;

1. பையனே நீகழுதையின்மேல் பகட்டாயேறினாய்,
2. ஐயையோ இதொருமெத்த அநியாயம், யாரும்இதை க்கேட்காரோ,
3. கிழவனை இவனும்கீழேவிட்டு, கெட்டியாயுட்கார்ந்து,
4. சட்டமாய்க்கழுதையை திட்டமாய் நடத்தியே ஜில்தியில் ஓட்டுகிறான்.
5. கட்டியில் கிழவனும் தட்டித்தடுமாறி குட்டிக்கரணங்கள்போடுறானே,
6. சட்டமீறிய இவனது நடத்தையை சர்க்கார் அறியாரோ, சர்க்கார் அறியாரோ-சர்க்கார் அறியாரோ யாரோ (பையனே)

ஏ பையா! உன்னைத்து சென்ற தகப்பனை நடந்துவரச்சொல்லி நீமட்டும் இந்தக்கழுதையின்மேல் ஏறிக்கொண்டுபோகிறாயே, உனக்கென்ன கால்நொண்டியா? இப்பேர்ப்பட்ட அனியாயம் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? (என்று சொல்லவும்)

மகன்:- ஐயா அந்நியர்களே! நீங்கள் வருத்தப்பட வேண்டாம்; நான் என் வயதுசென்ற தகப்பனாரை எனக்குப்பின்னால் கழுதையின்மேல் ஏற்றிவைத்துக்கொள்கிறேன். (என்று சொல்லவும் தகப்பனும் மகனுக்குப்பின்னால், உட்கார்ந்து கொண்டான்.)

அந்நியர்:- பையனே! ரொம்பவும் சந்தோஷம் போய்வருகிறோம் வந்தனம்.

மகன்:- வந்தனம் போய்வாருங்கள். (போகிறார்கள்)

மூன்றாவது அங்கம்

கிழவன்:- குழந்தாய்! சீக்கிரம் ஓட்டு. காலதாமதம் ஆகிறது, சந்தைக்குப் போய் திரும்பிவரவேண்டாமா?

மகன்:- அப்படியே ஓட்டுகிறேன் ஹை, ஹை (என்று ஓட்டவும், வழியில் சிலர் எதிரேவர அவர்களில் ஒருவன் மற்றவர்களைப்பார்த்து) இந்த அனியாயத்தை நீங்கள் எங்கேயாவதுபார்த்திருக்கிறீர்களா? இதனால்தான் உலகத்தில் மழையே இல்லாமல் போகிறது; (என்று இருவரையும் பார்த்து)

அந்நியரில் ஒருவன்:- ஏ நன்றியில்லாதவர்களே! உங்களுக்கு புத்தியில்லையா? வாயில்லாஜெந்துக்களிடத்தில் நீங்கள் அன்பாயிருக்கக்கூடாதா? இதன்பேரில் நீங்களிருவரும் ஏறிக்கொண்டால் இதன் முதுகு முறிந்துபோகாதா?

இராகம்செஞ்சுருட்டி-தாளம்-சாபு-மெட்டு-சீரார் சபையில்
உத்தரம் பிரதி உத்தரம்;

1. அக்:- நன்றியற்றவர்களே நவிலுவீர்நீங்கள்யார்,
இன்றுகழுதையின்மேல் எங்கேசெல்லுகிறீர்கள்;

ஏ நன்றியில்லாதவர்களே நீங்கள் இருவரும் யார் உங்களிருவருக்குமுள்ள சம்மந்தமென்ன? எங்கேபோகிறீகள்? இதற்கு விடைகூறுங்கள்.

2. மகன்:- சந்தைக்குச்செல்கிறோம் ஜல்தியாய்நாங்களும்
தந்தை இவரெனக்கு தனயன் அவருக்கையா?

ஐயா நாங்கள் சந்தைக்குப் போகிறோம், இவரெனக்குத் தகப்பன் நான் அவருக்குப்பிள்ளை எங்களிருவருக்குமுள்ள சம்மந்தமிதுதான்.

3 அ-ஓ:- இருவரும் கழுதைமேல் ஏறக்காரணமென்ன,
இருவரும்ஏறிக்கொண்டால் இடுப்புமுறிந்துபோமே;
நீங்கள் இரண்டுபேரும் இச்சிறுபிராணிமேல் ஏறி
க்கொண்டால், இதன் முதுகு முறிந்துபோகாதா? உங்களுக்கென் இவ்வளவுதூரம் அறிவு எட்டாமல் போகவேண்டும்?

4. மகன்:-அங்கிருந்த இருவர்-அவ்விதம் செப்பியதால்
தங்கி இதன்மேல் வந்தோம்-தயவுடனே நாங்கள்;
ஏ அந்நியர்களே! நீங்கள் எங்கள் பேரில் வீணுக
க்குற்றம் சுமத்தவேண்டாம். இதற்குமுன் சென்றவர்கள் அவ்விதம் சொன்னதினுல் நாங்கள் அப்படியே செய்தோம். இனி நீங்கள் சொல்லும் விதமாயும் கேட்கசித்தமாயிருக்கிறோம் (என்று சொல்ல).

அ-ஓ:-ஏ மனிதர்களே! நீங்கள் இந்தக்கழுதையின்பேரில் ஏறிச்செல்வதைவிட, இதை நீங்கள் தூக்கிக்கொண்டு செல்வது மிகவும் சிலாக்கியம் என்று நினைக்கிறோம். பிறகு உங்களுடைய சித்தம்,

கிழவன்; அந்நியர்களே நீங்கள் சொல்வது எனக்கும் உசிதமாகத்தான் தோன்றுகிறது. நாங்களும் அப்படியே செய்கிறோம் (என்று கழுதையின் கால்களைக்கட்டி குறுக்கே மூங்கிலைப்போட்டுத் தூக்கிக்கொண்டார்கள்.)

அ-ஓ:-இப்பொழுது ரொம்பவும் சந்தோஷம், போய் வருகிறோம் வந்தனம்.

கிழவன்:-வந்தனம் போய்வாருங்கள். (போகிறார்கள்)

நான்காவது அங்கம்.

கிழவன்:-அப்பாகுழந்தாய்! அதோ ஒருபாலம் தெரிகிறதுபார்! அதன் பேரில் ஜாக்கிறதையாக நடந்துபோ

அது வெகு சிறியபாலம் கால் தவறினல் நாமும் கழுதை யும் விழுந்து விடுவோம் தெரியுமா? உஷார்!

மகன்:-அப்பா! அப்படியே செய்கிறேன். எனக்கு இந்தக்கழுதையைத் தூக்கமுடியவில்லையே என்னசெய் வேன்,

கிழ்வன்:-என்ன செய்யலாம் மகனே! நாம் ஒவ்வொருவரையும் திருப்தி செய்யத்தான் வேண்டியிருக்கிறது. நாம் என்னசெய்யலாம், (இவர்கள் இவ்விதம் தூக்கிக் கொண்டுபோகையில் எதிரில்வந்த ஒருவன், தனக்குப்பின்னல் வருகிறமற்றவர்களைப்பார்த்து)

ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்! இங்கே ஒரு வேடிக்கை நடக்கிறது சீக்கிரம் வாருங்கள்! சீக்கிரம் வாருங்கள்! (என்றதும் எல்லோரும் சேர்ந்து).

இராகம்இந்துஸ்தானி-தாளம்-ஏகம்-மெட்டு-பஹார்மொரி

பல்லவி.

அங்கியர்:-

1. இந்த விந்தையை நாம் என்னவென்று உரைப்போம்;

அனுபல்லவி.

2. பந்தமாய்த்தாங்கள்-பாரத்தைச்சுமந்து,
   வந்த விதந்தனைப்பார்-ஹா-ஹா; (இந்த)
3. கழுதையின் கால்களை கபடமாய்க்கட்டி,
   விழுந்து வருவதைப்பார்-ஹா-ஹா; (இந்த)

(என்று சொல்லிக்கொண்டு கையைத்தட்டி ஹோவென்று கூச்சல்போடவும், கழுதை உதைத்துக்கொண்டு ஆற்றில் விழுந்துவிட்டது)

கிழவன்:-மகனே! கழுதை உயிரோடு இருக்கிறதா? செத்துப்போய்விட்டதா? பார்!

மகன்:-அப்பா! இவ்விதமாக இவர்கள் கூச்சல்போட்டு, கையைதட்டினால் கழுதை கீழே விழாமலிருக்குமா? அப்படி இந்தவெள்ளத்தில் விழுந்தும்சாகாமலிருக்குமா? இதுவும் போதாதென்று கால்களையும் கட்டிப்போட்டிருக்கிறது. இவ்விதமிருக்கும்போது கழுந்த சாகாமல், இன்னும் உயிரோடிருக்கிறதா? அது முன்னமேயே செத்துப்போயவிட்டது. நாம் எல்லாருடைய பிரீதியையும் சம்பாதிக்க நினைத்தால், நமக்கு கழுதைமட்டுமோபோகும், இன்னும் எதெது இருந்தாலும் அதெல்லாம் போய்விடும் அப்பா! தாங்கள் இனிமேலாவது அவ்விதம் செய்யாமலிருக்கும்படி மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி பிறர் சொல்வதைக்கேட்பதாயிருந்தால் யுக்தமானதை அங்கிகரித்து அயுக்தமானதை நீக்கிவிடவேண்டும். அது தான் பகுத்தறியும் குணமுள்ள நமக்குயோக்கியமானது. (என்று சொல்ல)

கிழவன்;-அப்பா மகனே! இனிமேல் அவ்விதமாகவே் நடப்போம். போவோம் வா் வீட்டுக்கு-(போகிறார்கள்)

மங்களம்.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி-மெட்டு--வந்தனம் தந்தேன்;

1. மங்களமாக ராஜனை-வாழ்த்துவோம் நாமே,
சிங்கம்போன்ற ஐந்தாம் ஜார்ஜும் சிறந்தமேரிராணி (யும்
க்ஷேமமாய்-வாழ்கவே
சிறப்புடன் தியானிப்போம்-தியாகராஜனை தினந்தினமும்-(மங்க)

2. பந்துவைப்போலே எந்நாளும்-பார்த்துவருவோம்,
சந்ததமும் சிந்தைதனில்,சாசுவதமாயிருக்கவே,
ஈசனை ஜகதீசனை

, ஏற்றுவோம் போற்றுவோம் எந்நாளும் நாம் இடை
[விடாமல் (மங்க)

(மங்களம்பாடினதும் நாடகத்தை முடிக்கவேண்டும்)

DRAMA—நாடகம் 2.

முனியனும் அவன் தாயாரும்.

அங்கம். 1.

தாயார்: முனியா! நீ இங்கேயே இருந்து வீட்டை ஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டிரு, நான் கடைக்குப் போய் வீட்டுக்கு வேண்டிய சில முக்கியமான சாமான் களை வாங்கிக்கொண்டு சீக்கிரம் வந்து விடுகிறேன். அதற் குள் வீட்டைத்திறந்து போட்டுவிட்டு ஓரிடத்திற்கும் ஓடிப்போகாதே; என்ன! தெரியுமா !...

முனியன்:- அம்மா! நானும் உன்னோடு வருவேன் கடையில் என்னென்ன சாமான்கள் இருக்குமென்று என க்குத்தெரியவே தெரியாது. எனக்குக் கடைத்தெருவை ப்பார்க்கவேண்டுமென்று அதிக ஆசையா யிருக்கிறது. ஆகையால் என்னை தயவுசெய்து தாங்கள் அழைத்துக் கொண்டு போகவேண்டும்.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஆதி.

மெட்டு-ஐஸே நாலே.

1. அம்மா, இப்போ நானும் உன்னைத்தொடர்வேன்
அன்பாய் நீயும் அழைத்துப்போகவேணும்,
கடைக்கு-அழைத்துப்போகவேணும்;

2. செம்பயூரகக்கடையின் விஷயம் தெரிந்துகொள்ள
விருப்பமே,
மும்முறைநான் வேண்டுகிறேன் மூர்க்கத்தனத்தை
விடுவீரே. (அம்மா)

அம்மா! நான் தங்களை காசு பணம் ஒன்றும் கேட்க மாட்டேன்; கூடிய சீக்கிரத்தில் கடையிலுள்ளவைகளைப் பார்த்துவிட்டு தங்களோடு திரும்பிவந்துவிடுகிறேன்.

தாயார்:- அப்பா முனியா! நீ கடையைப்பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறதினல், நான் உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன். சீக்கிரம் உள்ளே போய் பூட்டை எடுத்துக்கொண்டுவா, வீட்டைபூட்டிவிட்டு சீக்கிரம் போவோம்.

மு:-அம்மா! இதோ கொண்டுவருகிறேன், (என்று உள்ளே போய் பூட்டை எடுத்துக்கொண்டுவந்து) இந்தாருங்கள் பூட்டு (என்று கொடுக்கிறான்).

தா:-(வீட்டை பூட்டிவிட்டு) போவோம் வா கடைக்கு, முனியா! போகிறார்கள்.

அங்கம். 2.

தாயார்:-முனியா! (விரலை சுட்டிக்காட்டி) இதோ தெரிகிறதே இதுதான் பலசரக்குக்கடை.

முனியன் பலசரக்குக்கடையென்றால் என்ன? அதில் என்னென்ன சாமான்கள் இருக்கும்?

தாயார்:-முனியா! இந்தக்கடையிலுள்ள சாமான்களையெல்லாம் ஒவ்வொன்றாய்ச்சொல்லிக்கொண்டு வருகிறேன். அவைகளை எல்லாம் கவனித்துக்கொண்டுவா; சொல்லுகிறேன் கேள்;

மெட்டு-நொண்டிச்சிந்து தாளம ஏகம்.

1. உப்பு, புளி, மொளகாவெத்தல்—அரிசி,
திப்பிலி, கடுக்காயுடன், மஞ்சள், துவரை;
2. சோளங்கம்பு பயருளுந்து—கடலே,
ஏலங்கிராம்பு ஜாதிக்காயிலவங்கப்பட்டை,
3. எள்ளு, சுக்கு, கடுகு, காயம்—மொளகு,
வெல்லம், மொச்சைக்கொட்டைதட்டப்பயருடனே,
4. வெங்காயம், கொத்தமல்லியும்-பாக்கும்,
சிங்காரமாயெண்ணெய் கேழ்வரகு, நெய்யும்,
5. பந்தியாக இருப்பதைப்பார்-அதனை
அந்தமாக மனதினில் அமைத்துக்கொள்வாய்;

அப்பா முனியா! இந்த பலசரக்கு சாமான்களை கடைக்காரர்கள் படியினால் அளந்தும், திராசினால் நிறுத்தும் கொடுப்பார்கள். இதுவும்தவிற துணிகள் முதலான இதற சாமான்களை கஜக்கோலால் அளந்தும் கொடுக்கிறார்கள், இவைகளெல்லாம் தெரியக்கூடிய சிலவிஷயங்களை உனக்குச்சொல்லுகிறேன் கேள்.

இராகம்-நாதநாமக்ரியை ஆனந்தக்களிப்பு.
மெட்டு-தானதி நாதந்தினை.

1. அழக்கெட்டு படிஒன்று பாரு—அளக்கவே,
அப்படி எட்டாகும் மரக்காலொன்றுக்கு;
2. மரக்காலஞ்சாகுமே பறை—சேர்த்தால்,
மரக்கால் நானூறாகும் கரிசை ஒன்றுக்கு;
3. பறை எண்பதாகுமே கரிசை—இப்படி,
பற்பலபேர்களும் பார்த்துக்கொள்வார்கள்;

இராகம்-நாதநாமக்ரியை-தாளம் ஏகம்,
மெட்டு தந்தனத்தம்தனதானை.

1. மூன்றுதோலா ஒருபலமாம்—நிறுத்தால்,
மூன்றும் ஐந்தும் சேர்ந்து பலம் சேர்ஒன்றாகும்மே;

2 அஞ்சுசேர் ஒருவீசையாம்—சரியாய்,
அவ்விதம் எட்டுவீசைக்கொருமணங்காய்;
3 இருபது மணங்குசேர்ந்தால்—எல்லோரும்,
எடுத்துரைப்பாரதை பாரமென்றே.

இராகம் செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.
மெட்டு-பக்தியுடன் பாதம்.

1. அங்குலம் பனிரெண்டு அடி ஒன்று ஆகுமே,
அடி மூன்றுகஜமொன்ருய்,
ஐந்தரைகஜம்சேர்ந்து அளக்கப்போலொன்ருகும்?
அவ்விதமே பார்த்தால்;
2. போல்நாற்பதுக்கொரு பர்லாங்கென்றுசொல்வார்;
பிரியமாக எல்லோரும்,
நாலிரண்டுபர்லாங் சேர்ந்தாலது வொரு,
நலமாய் மைலாகுமே;

முனி.— அம்மா! இவ்வித விஷயங்களை நான் இப்பொழுது நன்ருய்த் தெரிந்து கொண்டேன். இதைத்தெரிந்து கொண்டதிஞல் கடையிலுள்ள சாமான்களை மோசம்போகாமல் நன்ருய் வாங்கும் சாமர்த்தியம் இப்பொழுது எனக்கு உண்டாயிற்று. அப்பொழுதே நீங்கள் என்னைக்கடைக்கு அழைத்துக்கொண்டுவராமல் போஞல் நான் இவைகளைத்தெரிந்துகொண்டிருப்பேஞ? அதற்குத்தான் நான் தங்களோடு வருவேன் என்றுசொன்னேன். நீங்கள் ஒருசாமானும்வாங்கவில்லையே, ஆஞல்என்ன வாங்கப்போகிறீர்கள்?

தா:- முனியா! நம் வீட்டில் எலி உபத்திரவம் ஜாஸ்தியாகவிருக்கிறது. அதைப்பிடிக்கும்பொருட்டு ஒருஎலிக்கூண்டு வாங்கப்போகிறேன்.

மு:- ஆஞல் சீக்கிரம் இந்தக்கடையில் அதை வாங்கிக்கொள்ளுங்கள்.

தா:- அந்தக்கூண்டு இந்தக்கடையில் கிடையாது.

மு:- ஆனல் எந்தக்கடையில் கிடைக்கும்?

தா:- அதோ தெரிகிறது பார் ஒருகடை அதில்கிடைக் கும்.

மு:- அது என்னகடை?

தா:- அதுதான் இரும்புக்கடை.

மு:- இரும்புக்கடையில் என்னென்ன சாமான்கள் கிடைக்கும்?

தா:- அதில் கத்தி, கத்தரிக்கோல், மண்வெட்டி, கோடறி, இரும்புச்சட்டி முதலான அநேகஇரும்பு சாமா ன்கள் கிடைக்கும்.

மு:- அப்படியானல் அந்தக் கடைக்குப் போவோம் வாருங்கள் (போகிருர்கள்).

முனியன்தாயார் ஜானகியம்மாள்:- ஓய் செட்டியாரே! எலிக்கூண்டு ஒன்று எடும் பார்ப்போம்.

செட்டியார்:- அம்மா! எலியை கெட்டியாய்ப்பிடிக் கும்படியான முள்கூண்டு ஒன்று வேண்டுமா? அல்லது எலி அடையும்படியான சாதாரண கூண்டுவேண்டுமா?

ஜா:- எலி அடையும்படியான கூண்டை எடும்பார்ப் போம்.

செ:- இந்தாருங்கள் அம்மா! (என்று எடுத்துக்கொ டுக்கிருன்).

ஜா:- இதன் விலை என்ன? செட்டியாரே!

செ:- இதன் விலை 12 அணு.

ஜா:- ஒரே விலையாய் சொல்லிவிடும், இரண்டாம்விலை வேண்டாம்.

செ:- 10 அணு கொடுத்தால் கொடுப்பேன், இல்லா விட்டால் கொடுக்கமாட்டேன்; இஷ்டமானல் வாங்கலாம் கஷ்டமானல் போகலாம்.

ஜா:-செட்டியாரே! இந்தாரும் பணம் கூண்டைக்கொடும்

செ.-அம்மா! உங்களுக்காகத்தான் இதை இந்த விலைக்குக்கொடுத்தேன். வேறொருவருக்கும் நான் கொடுக்கவேமாட்டேன். மகாராஜியாய்ப்போய்விட்டு வாருங்கள். (இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது முனியன் கடைக்காரனுக்குத்தெரியாமல் பேனாக்கத்தி ஒன்றைத்திருடிமடியில் வைத்துக்கொள்ளுகிறான்.)

ஜா: முனியா! போவோம் வா வீட்டுக்கு.

மு.-வாருங்கள் போகலாம், (போகிறார்கள்)

(போகும்பொழுது முனியன் நடுவழியில் மடியிலிருந்து பேனாக்கத்தியை எடுத்து) அம்மா இதோ பார் பேனாக்கத்தி; (என்றுகாட்டுகிறான்)

ஜா:-அப்பா முனியா! இது ஏது உனக்கு?

மு:-அம்மா! நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது கடைக்காரன் காணாமல் மெதுவாய்த்திருடி மடியில் வைத்துக்கொண்டு விட்டேன். என் சாமர்த்தியம் யாருக்காவது வருமா? அம்மா!

ஜா:-அப்பா முனியா! பேஷ்! நீ ரொம்பகெட்டிக்காரன்.

இராகம்-இங்கிலீஷ் நோட்டு தாளம்-ஆதி மெட்டு-ஸாரிகாம பாபா.

1. அப்பா ஓடிவாடா அருமைக்கண்மணியே,
எப்படி கடைக்காரனை ஏமாத்தி எடுத்தாய்; (என்று முத்தமிடுகிறாள்)

2. சட்டமாய் நீ வெகு சமத்துள்ள பையன்,
கெட்டிக்காரனென்று கனவிலும் நினைப்பேன்,

3. இந்த விதமாக எப்பொதும் நீ செய்தால்,
சொந்தமாய் நான்உனை துரையென்று அழைப்பேன்;

அப்பா முனியா! நீ ரொம்பவும் புத்திசாலி நீ இவ்வளவு கெட்டிக்காரனென்று நான் இது வரையிலும் நினைக்கவேயில்லை துரையே! (என்று தட்டிக்கொடுக்கிறாள்)

அங்கம்—3.

ஜானகியம்மாள்:-முனியா! நான் சில சாமான்கள் வாங்குகிறதற்காக கடைக்குப்போகப் போகிறேன், நீயும் வருகிறாயா?

முனியன்:-நானும் கட்டாயம் உங்கள் பின்னோடு வருவேன், அம்மா!

ஜா:-ஆனால் சீக்கிரம் வா; ஏதோ விளையாடிக்கொண்டிருக்கிறாயே;

மு:-அம்மா! இதோ வந்துவிட்டேன், (விளையாட்டை நிறுத்திவிட்டு) வா அம்மா போவோம், (போகிறார்கள்)

ஜா: நீ இந்தக்கடையைபார்த்ததே இல்லையேமுனியா!

மு:-நான் பார்த்ததில்லையே, இது என்னகடை?

ஜா:-இது நகைக்கடை, இதில் வெள்ளிநகைகள், வெள்ளி சாமான்கள், தங்கநகைகள், கல்லு நகைகள் முதலானவைகள் கிடைக்கும்.

மு:-இந்தக்கடையில் நீங்கள் என்ன வாங்கப்போகிறீர்கள்?

ஜா:-இதில் வெள்ளிச்சங்கிலி ஒன்று வாங்கப்போகிறேன். (கடையின் கிட்டப்போய்) ஓய் செட்டியாரே! உமது பக்கத்திலிருக்கிற வெள்ளிச்சங்கிலியை எடும் பார்ப்போம், (செட்டியார் எடுத்துக்கொடுக்க) இதில் ஒரு கஜ நீளமுள்ள துண்டின்விலை என்னங்காணும் செட்டியாரே!

செட்டியார்:-அம்மா! தங்களுக்கு வேண்டியது அவசியமாயிருந்தால் இதை நிறுத்துப்பார்த்து விலை சொல்லுகிறேன், இதைப்போலொத்த சாமான்களுக்கு இடையின்

பேரில் நான் விலை சொல்வோம். ஒரு ரூபாயிடை வெள்ளிக்கு 12 அணா வீதமும் கூலி 2 அணாவீதமும் கொடுக்கவேண்டும்; இஷ்டமானல் வெட்டி நிறுத்துப்பார்த்து விலை சொல்லமுடியும், வேறுவிலை கேட்கவேண்டாம். தங்களிஷ்ட மென்ன?

ஜா:-என்னங்காணும் இவ்வளவு கண்டிப்பாய் பேசுகிறீர்! வேறு விலை கிடையாதோ?

செ: ஏற்கனவே சொல்லிவிட்டேனே அம்மா! அடிக்கடி கேட்கவேண்டாம்; இஷ்டமாயிருந்தால் வாங்கலாம் கஷ்டமாயிருந்தால் போகலாம்;

(இவர்கள் இப்படிப்பேசிக்கொண்டிருக்கும்பொழுது முனியன் கடைக்காரனுக்குத் தெரியாமல் ஒரு வெள்ளிக்கிண்ணத்தை எடுத்து, மடியில் வைத்துக்கொள்வதை ஒரு டாணாக்காரன் பார்த்து, பையனை பிடித்துக்கொண்டுகேட்கிருன்)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி-மெட்டு-ஸ்ரீராமசந்திரனே;

டாணாக்காரன்:-

1. ஏண்டா பயலேநீயும் ஏதோதிருடிக்கொண்டாய்,
வேண்டாம்பொய் உண்மைதனை-சொல் சொல்,சொல்
ஏதடா-வெகு-சூதடா; (ஏண்டா)

2. உண்மையைச்சொல்லாவிடில்-உன்னை நான் விடமாட்டேன்,
கண்டிப்பாய் தண்டிப்பதை பார்-பார்-பார்;
காரியம்-நல்ல-வீரியம்; (ஏண்டா)

3. அந்தரங்கமாய் நீயும்-அன்புடன் எந்தனிடம்,
விந்தையாய் செய்தவையை-கூர்-கூர்-கூர்;
சொல்லுவாய்-அதனை-விள்ளுவாய்; (ஏண்டா)

அடேபயலே என்னடா திருடினுய் நீ? உண்மையைச்சொன்னல் பிழைப்பாய், ஜாக்கிரதை! (தடியை ஓங்குகிருன்)

மு:-நான் ஒன்றும்திருடவேயில்லையே!

டா:-ஏ பயலே! ஒன்றும் எடுக்கவில்லையா! நீ திருடினது மன்னியில் என்னிடம் பொய்யும் சொல்லுகிறாய்;

இராகம் இந்துஸ்தானி-தாளம்-ஆதி மெட்டு-ரவகீமர

உத்தரம்-பிரதி-உத்தரம்; [சீகியாஜானே,

1. என்னடா பயலே நீ இப்போ எதையோ துணியால் மறைத்துக்கொண்டாய்,

என்னிடம் சொன்னால் பிழைப்பாய் நீயும், இல்லாவிட்டால் சாவாயே;

2. என்னிடம் ஒன்றும் இல்லை ஐயா! என்ன செய்குவேன் நானய்யா,

உன்னைச் சரணமாயடைகுறேறென்-உடனே மன்னித்து விடுவீரே;

நான் ஒன்றும் திருடவில்லை! தயவுசெய்து தாங்கள் தான் என்னைக்காப்பாற்றவேண்டும்.

டா:-அடே பயலே! பொய்யா சொல்லுகிறாய்! உன்னிடத்தில் ஒன்று மில்லையா?

மு:-என்னிடத்தில் ஒன்றுமேயில்லை (என்று சொன்னதும் டாணாக்காரன் அடித்துத் துணியைப்பிடித்திழுக்கவும், வெள்ளிக்கிண்ணம் கீழே விழுகிறது)

டா:-(கிண்ணத்தை எடுத்துக்கொண்டு) ஏண்டாபயலே! உன்னிடத்தில் ஒன்று மில்லையென்று சொன்னாயே இந்தக்கிண்ணம் எப்படி வந்தது உன்னிடம்?

மு:-(நடுக்கத்துடன்) ஐயா! தெரியாத்தனமாய் இந்தக்கடையிலிருந்து எடுத்து விட்டேன்; என்னை இந்தத்தடவை மாத்திரம் தாங்கள் தயவுசெய்து மன்னித்து விட்டுவிடவேண்டும்.

டா:-ஏ பயலே! உன்பேரென்ன?

மு:-என்பேர் முனியன். (டாணாக்காரன் புஸ்தகத்தில் குறித்துக்கொள்ளுகிறான்)

டா:-உன்னைச்சேர்ந்தவர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?

மு: இதோ என் தாயார் இருக்கிறாள்

டா:-ஏ பெண்பிள்ளே! இங்கே வா; இவன் உன் மகன் தானா?

ஜா: இவன் என் மகன் தான்;

டா: உன் பெயரென்ன?

ஜா-என்பெயர் ஜானகியம்மாள்.

டா: (இவர்களை அழைத்துக்கொண்டுபோய் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் கிண்ணத்துடன் விஷயங்களைச் சொல்லி ஒப்புவிக்கிறான்)

அங்கம் 4.

இன்ஸ்பெக்டர்-அடேபயலே! உன்பேர் தானா முனியன்?

மு:-ஆம், என்பேர் தான்.

இன்: இதோ நிற்கிறவள் உன் தாயர் தானா?

மு:-ஆம்

இன்: நீ வெள்ளிக்கிண்ணத்தைத்திருடினதுஉண்டா?

மு:-ஆம் திருடினதுண்டு.

இன்:-இதற்கு முன்னால் இவ்விதமாக நீ திருடியிருக்கிறாயல்லவா?

மு:-வெகு நாளைக்கு முந்தி ஒரு பேனாக்கத்தியை எடுத்தேன்; இப்போது ஒன்றும் எடுக்கவில்லையே;

இன்:-பேஷ்! ரொம்ப கெட்டிக்காரன்! அந்தக்கத்தியை யாரிடத்தில் கொடுத்தாய்?

மு:-என் தாயாரிடத்தில் தான் கொடுத்தேன்.

இன்:-இன்னும் எதைது எடுத்திருக்கிறாய்? சொல்லு: பார்ப்போம், ரொம்ப நல்ல பிள்ளை நீ;

மு:-வேறு ஒண்ணும் எடுக்கவேயில்லையே; பள்ளிக்கூடத்திலேதான் முன்னே, ஸ்லேட்டு, புஸ்தகம், பென்ஸல், இதெல்லாம் எடுத்துக்கொண்டு வந்தேன்.

இன்:-அதெல்லாம் யாரிடத்தில் கொடுத்துவைத்திருக்கிறாய்?

மு;-என் தாயாரிடத்திலே தான்.

இன்:-இன்னும் ஏதாவது எடுத்திருக்கிறையோ? ஞா பகப்படுத்தி சொல்லு பார்ப்போம்.

மு:.வேறு ஒன்னுட் ஒரு இடத்திலேயும் எடுக்கவே யில்லே.

இன்:-ஏ அம்மா! உன்பேர் ஜானகியம்மாள் தானு?

ஜா:-ஆம்.

இன்: உன்னுடைய பிள்ளே திருடிக்கொடுத்த சொத் துக்கள் உன்னிடத்தில் இருக்கின்றதா?

ஜா:-என்னுடைய பிள்ளே திருடவுமில்லே, என்னிடத் தில் ஒரு சாமானும் கிடையாது.

இன்;-இந்தக்கிண்ணம் உன்பிள்ளே திருடினதுதானு?

ஜா-திருடினதை நான் நேரில் பார்க்கவில்லே, டாணுக் காரர் சொன்னதின்மேல் தெரியும்,

இன்: இதற்குமுன் உன்னிடம் உன்மகன் சில சொத் துகள் திருடிக்கொடுத்திருக்கிருனமே, அவைகள் உன்னி டமிருக்கிறதா?

ஜா:-நீங்கள் அவ்விதமாக என்னே அடிக்கடி கேட்கக் கூடாது. நான் எற்கனவே அவன் திருடவில்லே யென்றும் அப்படிப்பட்ட சொத்துக்கள் என்னிடம் கிடையாதென் றும் சொன்னேன். அப்படியிருக்க தாங்கள் அவ்விதமா கக்கேட்பது தங்களுடைய மேலான பதவிக்கு அழகல்ல;

இன்:-(அவளுடைய வீட்டை பரிசோதிக்க கத்தி, நகைகள், ஸ்லேட்டுகள், புஸ்தகங்கள் முதலியவைகள் அக ப்பட்டன.)

முனியா! இவைகள் நீ திருடினவைகள் தானு?

மு.-நகைமட்டும் நான் திருடினதல்ல, மற்றவைகள் நான் திருடினது தான்.

இன்:-இந்த நகை (தங்கக்கொடி) யாருடையது என் று உனக்குத்தெரியுமா?

மு-நிச்சய மாகச்சொல்ல முடியாது; என் தாயாருடையதுபோல் தோன்றுகிறது.

இன்.-உன்தாயாருக்கு இவ்விதமான நகைஒன்றுண்டா?

மு-உண்டு.

இன்-ஏன் அம்மா! இந்தநகை உன்னுடையது தானா?

ஜா-ஆம்! என்னுடையது தான்.

இன்-மற்ற சாமான்கள் உன்மகன் திருடினது தானும்

ஜா:-இருக்கலாம், எனக்கு ஒன்றும் தெரியாது.

இன்.-ஏண்டா முனியா! உன் தாயாரிடத்தில் தானே இதெல்லாம் நீ கொடுத்தாய்.

மு-என்தாயாரிடத்தில் தான் கொடுத்தேன்.

இன்:-ஏன் அம்மா! நீ தானே இவைகளை வாங்கிவைத்தாய்;

ஜா,-நான் அதைப்பற்றி நிச்சியமாகச் சொல்லமுடியாது

இன்:-இந்தத்திருட்டு சாமான்கள் உன்வீட்டிலிருந்தால் அதற்கு நீசம்மந்தப்பட்டவளா? இல்லையா?

ஜா;-ஆம், சம்மந்தப்பட்டவள் தான்.

இன்;-இந்த நகையாருடையது?

ஜா:-இது என்னுடையது தான், என்புருஷனால் எனக்குச்செய்து போடப்பட்டது. அவர் இறந்து ஒரு வருஷமாகிறது.

(இன்ஸ்பெக்டர் இவர்களைக்கைதிசெய்துசாமான்கள் சகிதம், மாஜிஸ்ட்ரேட்டினிடம் ஒப்புவிக்கிறார்.)

அங்கம்—5.

மாஜிஸ்ட்ரேட்:-(கோர்ட்டு கூடினதும் சேவகனைக்கூப்பிட்டு) முனியனைக் கூப்பிடு, (என்று சொன்னதும்)

சேவகன்:-முனியன்-முனியன்-முனியன். (என்று நீட்டிக்கூப்பிடுகிறான்.)

மு;-ஆஜர் (சேவகன் உறுதிமொழி வாங்குகிறான்)

மாஜி-உன்பேர் தானு முனியன்!

மு:-ஆம், என் பேர்தான்.

மாஜி:-நீ இந்த சாமான்களைத் திருடினது உண்மை தானு?

மு.-உண்மைதான்.

மாஜி,-நீ எவ்வளவு காலமாய் இவ்விதமாகத்திருடிக் கொண்டு வருகிறுய்?

முனி: அகவல்—இராகம்—ஆரபி

ஐயா நானும்-ஐந்தாறுவயதில்,
பையவே கடைக்கு-ப்பண்பாகச்சென்றேன்;
நலமுடன் என்தாய்-நல்லசாமானை,
பலபல கடையில்-பார்த்துமே வாங்க,
தாயின் மறைவில்-தனியாயிருந்து,
மாயமாய்க்கத்தியை-மறைந்தே எடுத்தேன்;
வருகின்றவழியில்-வணக்கமாய் நானும்,
விரும்பிக்கொடுக்க-மிக்கசந்தோஷமாய்,
கண்மணியே யென்று-கட்டியணைத்து,
பெண்மணி என்னை-பிரியமாய்த்தட்டினுள்;
ஆதலால் நானும்:அகமகிழ்கொண்டு,
தீதான செய்கையை-திருப்தியாய்ச்செய்தேன்;
அப்போதே என்னை-அதட்டி அடித்தால்,
இப்போது நானும்-இவ்விதம் செய்யேன்;
அறியாமற் செய்த-அறிவிலாதென்னை,
பிரியமாகத்தாங்கள்-பிரேமையுடன் காப்பீர்;
(என்று மாஜிஸ்ட்ரேட் காலில் விழுகிறுன்)

மாஜி:-எழுந்திருடா எழுந்திரு, பாசாங்கா செய்கிறுய் அப்படிப்போய்நில்.

ஆரடா சேவகன்! ஜானகியம்மாளைக்கூப்பிடு.

சேவகன்:-ஜானகியம்மாள்,-ஜானகியம்மாள்,-ஜானகியம்மாள் (கூப்பிடுகிறான்)

ஜா:-ஆஜர்.

மாஜி.-நீதானா ஜானகியம்மாள் என்பவள்?

ஜா:-ஆம், நான்தான்.

மாஜி:-இந்த சாமான்களெல்லாம் உன்பிள்ளை திருடின்துதானா?

ஜா:-ஆம், என்பிள்ளை திருடினது தான்.

மாஜி-நீ இதற்கு உடந்தையாயிருந்தாயல்லவா?

ஜா:-ஆம், தெரியாத்தனமாய் அவ்விதம் இருந்துவிட்டேன் இனிமேல் அம்மாதிரி இருக்கமாட்டேன்; இந்தத் தடவைமாத்திரம் தாங்கள் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.

இராகம்-இந்துஸ்தானி- தாளம்-ஏகம்-மெட்டு ஹாயேசய்.

ஐயாநீங்கள் அன்புடன் காத்தருள்வீர்; அறிவிலாதே (ந்தலையே,

வையகந்தனில் உங்களையே-எந்நாளுமே,

வாழ்த்துவேன் தினமும் பிரியமாயே,

ஐயனே என்செய்குவேன் - யாரைப்போய் நானண்டுவேன்,

ஐயனே, துய்யனே, மெய்யனே, இருகையனே. (ஐயா)

ஐயா தெரியாமற்செய்த குற்றத்தை மன்னித்து என்னைவிடுதலைசெய்யவேண்டும், எனக்கு அதிக அவமானமாயிருக்கிறது. (என்று காலில்விழுகிறாள்).

மாஜி:-எழுந்திரு, எழுந்திரு, அப்போதல்லவோ அந்தபுத்தியிருக்கவேண்டும். என்வீண்பாசாங்கு செய்கிறாய், அப்படிப்போய் நில்.

ஜட்ஜ்மெண்டு

1, முனியனென்பவன் 14 வயதுள்ளபையனைபடியால் அவனுக்கு ஒருடஸன் அடியும், 18 வயது வரையில்

செங்கற்பட்டிலுள்ள கைதிகளிருக்கும் பள்ளிக்கூடத்தில் (Reformatory School) வாசித்துக்கொண்டும், தொழில்கள்செய்துகொண்டும் இருக்கவேண்டும்.

2. மேற்கண்ட கைதியின்தாயார் ஜானகியம்மாள் திருட்டுக்குற்றத்திற்கு உடந்தையாயிருந்ததற்காக, 25 ரூபாய் அபராதமும், 6 மாதம்காவலும் நியமிக்கப்பட்டது. மேற்கண்ட ரூபாய் 25 ம் கொடுக்கத்தவறினால் மூன்றுமாதம் அதிகமாக காவலில் இருக்கவேண்டும். இவ்விதமாக தீர்ப்பு செய்யப்பட்டது (என்றதும் கைதிகளை சிறைச்சாலைக்குக்கொண்டுபோனார்கள் கோர்ட்டுகலைகிறது. கடையில் மங்களம்பாடி நிறுத்தவேண்டும்).

கடவுளைப்பற்றிய பொதுவான கீர்த்தனங்கள்.

இராகம்-காபிநாராயணி - தாளம்-ஆதி-மெட்டு-ஸரஸஸாம [தான.

பல்லவி.

1. உன்னையன்றிளனக்குற்றதுணை யாரு,
உண்மையாய் நம்பினேன் ஓதேவதேவா; (உன்)

அனுபல்லவி.

2. பன்னகசயன பரிவுடன் காப்பாய்.
பக்தஸம்ரக்ஷண—பாகவதப்ரேமா; (உன்)

சரணம்.

3. அண்டமெங்கும் படி அன்புடனளிக்கும்,
ஆபத்பாந்தவா நீ ஆதரிப்பாயே,
புண்டரீகநயன போற்றுவாயெந்தனே,
புகழ்ந்துபாடினேன்புருஷோத்தமனே; (உன்னை)

இராகம்-ஆபேரி-தாளம்-ஆதி-மெட்டு-நகுமோமோ;

பல்லவி.

1. ராகவா உனைநம்பினேன் நீ வேகமாய்வந்து எந்தனை [ரக்ஷிப்பாய்,
ராஜீவலோசன ராமஸ்ரீ ரகுகுலதிலகா. (ராகவா)

அனுபல்லவி.

2. பாகவதாள் அர்ச்சிக்கும் திவ்யபாதகமலமுடையவனே,
சந்ததம் வந்து நீ எந்தனைக்கார்த்திடுவாயோ,
சர்வலோக சரண்யா, (ராகவா)

சரணம்.

3. சுந்தராநீ என்னிடம்வெகு அந்தரங்கத்துடன்வந்து,
சொந்தம்போலெனை பாவித்துஅதி சிங்காரத்துடனே [யிருப்பாய,
மந்தஹாஸமுகத்துடனே அந்தமாயெனை ஆதரிப்பாய்,
உந்தனை வந்தனம் பண்ணினேன் தியாகராஜன்,
அதிவினோதமாகவே. (ராகவா)

இராகம் - சுத்தபங்காளா-தாளம்-ஆதி-மெட்டு-தொலிநே [சின;

பல்லவி.

1. இந்தஸமயம் வந்தெனை ரக்ஷிப்பாய்,
எனக்கொருவருமில்லை எதுகுலதிலகா (இந்த)

அனுபல்லவி,

2, சிந்தையில் நினைந்தேன் உந்தனை எந்நாளும்.
சித்தஜனையனே உத்தமபுருஷா. (இந்த)

சரணம்,

1. மாதவாநீரும் மாமனும்கம்ஸனை,
மாயமாக வதைத்து மங்கள முடிசூட்டி,
மாதா பிதாக்களின் குறைகளை தீர்த்தபின்,
மகிழ்ந்து நர்த்தனமிடும் மேகவர்ணநீ (இந்த)

இராகம்-முகாரி-தாளம்-ஆதி-மெட்டு-ஸரஸீருஹானனு;

பல்லவி.

1. புருஷோத்தமா போற்றுவாய் எந்தனை,
புவனமெல்லாம் கார்க்கின்ற தேவா; (புருஷோ)

அனுபல்லவி.

2. கருணாகராநீ கடைக்கண்ணால் பார்ப்பாய்,
காலனென்னிடம் கடுகிவராமலே; (புருஷோ)

சரணம்.

3. செய்தபாபத்தை சிறிதும் எண்ணுமல்;
தெய்வத்தைநொந்தேன் தெரியாமலேயான்,
வெயிலின்கொடுமை நிழலில்தோன்றுமே,
மெய்யாய்தியாகராஜன்மிகவாய்வேண்டினேன்; (புரு)

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி-மெட்டு-வேறொவ்வரே;

பல்லவி.

1. சங்கரனே உன்னை நம்பினேன்,
சித்தத்தில் வைத்து மெத்தவும் காப்பாய்; (சங்)

அநுபல்லவி.

2. கங்கையை சடையில் வைத்த,
கங்காதரர் கருணைசெய்வாய்; (சங்)

சரணம்.

3. சுந்தரனே ரஞ்சிதமாய், சொந்தமுடன் பார்த்துவந்த,
அந்தமுள்ள தியாகராஜா உந்தனையே நான்,
வந்தனங்கள் மிகசெய்தேன் எந்தனைநீ ஆதரிப்பாய்;
(சங்)

மங்களம்.

இராகம்இந்துஸ்தானி-தாளம்ஏகம்மெட்டுசும்சும்சும்பியா

மங்களமாகவே பாடுவோம் ஐந்தாம் ஜார்ஜும் மேரியும் வாழ்ந்திடவே;

எங்கெங்கும் ஏகமாய் திங்கள்போல் விளங்கும் எம்பரரும் எம்பிரெஸ்ஸும் வாழ்ந்திடவே;

சங்கையில்லாமலே, பங்கம்வராமலே, ஆனந்தமாய் கடவுளை அன்புடனேபாடுவோம் (மங்களம்).

முற்றிற்று.

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்.
14	6	பாந்துவாமா	பந்துவாமா.
15	18	தாழ்வுடனேயான்	தாழ்வுடனியான்.
15	19	கணக்கிலாபிழை	கணக்கிலாப்பிழை.
15	20	பிரியமுடனே ஏற்க	பிரியமுடனேற்க.
16	10	ஐயாகரணு	ஐஸாகரணு.
25	15	ஓர்ஒணுயும்	ஓர் ஒணுயும்.
26	16	ஆட்டுகுட்டியின்	ஆட்டுக்குட்டியின்.
40	13	அடியோடுபெயர்ந்து	நடுவில்முறிந்து.
48	3	ஒருநல்லபாம்பு	ஒரு பாம்பு:
48	12	அப்ழுபொது	அப்பொழுது.
52	12	ஸ்நெகம்	ஸ்நேகம்.
58	10	இப்பொதுதே	இப்பொழுதே.
59	16	கண்டெலியை	சுண்டெலியை.
60	6	எறிட்டதுநோங்கி	எறிட்டதுநோக்கி.
60	17	சிறந்தவேலைக்	சிறந்தவேலைக்காகும்.
64	10	நாய்வாய்ச்சிலை	நாய்வாய்ச்சீலை.
77	17	ராஜளியும்	ராஜாளியும்.
81	24	ஜாக்கிறதையாய்	ஜாக்கிரதையாய்.
93	21	என்று (கழுதையை	(என்று கழுதையை.
95	17	அணியாயம்	அநியாயம்.
96	5	அணியாயத்தை	அநியாயத்தை
96	16	அநட	அந:—
96	19	போகிறீகள்	போகிறீர்கள்.
97	27	ஜாக்கிறதையாக	ஜாக்கிரதையாக.
98	24	கழுகை	கழுதை.
01	17	போகிறுர்கள்	(போகிறுர்கள்.

உ

தெள்ளுதமிழ்க்கவிதேர் தியாகராஜப்புலவர்
விள்ளுதமிழ்க்கிண்டர்கார்ட்டனுக்குக்—கள்ளுகுதார்க்
கடம்பனுக்குமுன்வந்த கணபதிதானென்றும்
நடம்புரிந்துநல்குமருள்!

அகவல்.

மதிதவழ் குடுமிமாடங்கடொறுமீப்
பதிமிசைநிலவிப்படரொளிவிரிப்பக்
கண்டோரிமையா நாட்டங்களிப்பத்
தண்முறிசிதறித்தலைவரோடாடும்
பொன்னனூர்வாழுமிப்பொற்பமிர்ப்பாடலத்
தொன்னகரதனுட்டுலங்கு கல்லூரியில்
உபாத்திமைத்தொழிலையோதுவார்க்கெல்லாம்
உபாத்திமைத்தொழின்முறையுணரும்பொருட்டும்
சிறார் தஞ்சிறுமதித்திறனிதீ இப்பெருகவும்
உரு அநசைமிக்குற்றுலகமகிழ்வெய்தவும்
பாவிகைபாலர்கள்படித்தானந்தித்
தாடுறுபாடல்கடாமபலவியற்றித்
தந்தனனியாரெனிற்றண்டமிழ்க்கவிதே
சந்தணசிகாமணியாயென்றேய்க்கும்
மல்குபெரும்புகழண்ணியசெல்வம்
புல்குதியாகராஜனையனென்புலனே

இங்ஙனம்

அ. தங்கவேற்பிள்ளை,

சி. சை. பி. வி. ச

139950
சென்னை-600 008